04 JUN 2011

02 - 86
04-06-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*



# இப்படியும் ஒரு போட்டி




அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

# உலகை விழுங்கப்போகும் கடல்

புவி வெப்பமடைதல் காரணமாக கடல் நீர்மட்டம் இந்த நூற்றாண்டுக்குள் 1 மீற்றர் அதிகரிக்கும் என்று அவுஸ்திரேலியாவின் புதிய ஆய்வுக் குழு அறிக்கை தெரிவித்துள்ளது.

இதனால் நூற்றாண்டுக்கு ஒரு முறை ஏற்படும் கடற்கரையில் நீர் புகுந்து வெள்ளமயமாக்கும் நிகழ்வு இனி சகஜமான ஒன்றாக இருக்கும் என்று அந்த ஆய்வறிக்கை கூறியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகள் பூமியின் வெப்ப அளவு அதிகரித்திருப்பது நீக்கமற ஆய்வுகளில் தெரியவந்துள்ளதால் பூமியின் மேற்பரப்பு வெப்பமயமாகி வருகிறது என்பது வெறும் கோட்பாடல்ல உண்மை என்பது நிரூபணமாகியுள்ளதாக இது பற்றிய அவுஸ்திரேலிய அரசுத்துறை அறிக்கையும் கூறியுள்ளது.

அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியரும் ஆய்வாளருமான ஸ்டிபன் இது குறித்துக் கூறுகையில்;

1990 ஆம் ஆண்டை ஒப்பு நோக்குகையில் 2100 ஆம் ஆண்டு கடல் நீர்மட்டம் சுமார் 1.0 மீற்றர் உயரும் என்று தெரியவந்துள்ளது என்றார்.

2007 ஆம் ஆண்டு ஐ.நா. சுற்றுச்சூழல் சர்வதேச அரசுகள் குழுவின் அறிக்கை 0.8 மீற்றர் தான் கடல் நீர்மட்டம் உயரும் என்று தெரிவித்திருந்தது. தற்போது இந்த ஆய்வறிக்கை 1.0 மீற்றர் என்பதுதான் உண்மை நிலைவரம் என்று கூறியுள்ளது. துருவப்பகுதிகளில் கடலில் உள்ள பனிப்பரப்பு எவ்வளவு வேகமாக உருகி வருகிறது என்பது பற்றி நாம் உண்மை நிலைவரங்களை உலகிற்குக் கூறுவதில்லை என்று பேராசிரியர் ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.





கிரீன்லேண்ட் பனிப்பரப்பு எவ்வளவு வேகமாக உருகி வருகிறது என்பதைப் பார்க்கும் போது அது அதிகளவில் உருகிவருவதை நாம் ஆராய முடிகிறது என்றார் ஸ்டீபன். ஒரு மீற்றர் கடல் நீர்மட்டம் உயரும் என்று நாம் கூறினாலும் வேறு சில வர்ணனையாளர்கள் இது மேலும் கூட அதிகமாக இருக்கும் என்றே கருதுகின்றனர் என்றும் அதற்குக் குறைவாக ஒருவர் கூட இதனை அறுதியிடவில்லை என்றும் ஸ்டீபன் தெரிவித்துள்ளார்;.

கடல் நீர்மட்டம் அரை மீற்றர் அதிகரித்தாலே சிட்னி, மெல்போர்ன் ஆகிய நகரங்களின் கடற்கரைப் பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. மேலும் அவுஸ்திரேலியாவில் ஏற்படும் திடீர் பயங்கர வெள்ளம், காட்டுத்தீ அதிகரித்து வரும் வெப்பநிலை ஆகியவற்றையும் ஸ்டீபன் தனது ஆய்வுக்கு சாதகமான சுயதேற்றமாக எடுத்துரைக்கிறார்.

மேலும் அவுஸ்திரேலியாவில் சமீப காலங்களில் ஒரு நாளின் அதிகபட்ச வெப்ப நிலை ஒரு காலகட்டத்தில் எவ்வளவு நாள் அதிகமாக இருக்கிறது என்கிற விகிதமும் அதிகரித்துள்ளது என்று கூறுகிறார் அவர். அதாவது ஆண்டொன்றில் 15 நாட்கள் அதிவெப்ப நாட்களாக இருக்கும் என்றால் அது தற்போது 30 நாட்களுக்கு அதிகரித்துள்ளது. அதாவது அதிவெப்ப தினங்கள் இரட்டிப்பாகியுள்ளன என்கிறார். இதனால் வெப்ப அலைகளும் காடுகள் எரிவதும் அதிகம் ஏற்படுகிறது என்று கூறினார் பேராசிரியர் ஸ்டீபன்.

## இப்படியும்...

உலகில் எத்தனையோ விடயங்களுக்காக போட்டிகள் நடத்தப்படுகின்றன.உலக அழகிப் போட்டி, ஆணழகன் போட்டி,தொப்பையழகப் போட்டி,மிஸிஸ் திருமதியென எழுத எழுத எழுதிக்கொண்டே போகலாம். இவ்வாறான போட்டிகளில் சில வித்தியாசமாகவு;ம் விலகாரமாகவும் இருக்கும்.அந்த வகையில் அண்மையில் சிம்பாப்வே நாட்டில் மிஸ்டர் அலலட்சணம் என்ற போட்டியொன்றை நடத்தி ஒருவரைத் தெரிவு செய்து பரிசுகளும் வழங்கியுள்ளனர்.

சிம்பாப்வேயைச் சேர்ந்த ஒஸ்டின் பேலே என்பவரே அந்த நாட்டின் அலலட்சண ஆணழகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.அவர் தன்னுடன் போட்டி போட்ட 8 அழகர்களைத் தோற்கடித்து மிஸ்டர் அலலட்சண ஆணழகன் பட்டத்தை வென்றார்.

கடந்த சனிக்கிழமை வேடிக்கை விநோதம் நிறைந்த மிஸ்டர் அலலட்சண ஆணழகன் போட்டி சிம்பாப்வேயில் உள்ள பெய்ட்பிரிட்ஜில் நடந்தது.இதில் முதலில் 15 பேர் கலந்து கொள்வதாக இருந்தது.கடைசி நேரத்தில் தமது பெயர் கெட்டு விடுமெனக் கருதி 6 பேர் பின்வாங்கியதால் இறுதியில் 9 பேர் கலந்து கொண்டனர்.

அந்நாட்டின் கலை,பண்பாட்டு சபை மற்றும் சுற்றுலாத் துறை இணைந்து இந்தப் போட்டியை நடத்தின.தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடந்த இந்த போட்டியைக் காண நூற்றுக் கணக்கானோர் வந்திருந்தனர்.நாட்டின் தொலைதூர நகரங்களான புலாவாயோ ஹராவேவில் இருந்தும் கூட மக்கள் வந்திருந்தனர்.இந்தப் போட்டியின் நடுவர்கள் அனைவரும் பெண்கள்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட 30வயது இளைஞர் ஒஸ்டின் பேலே மிஸ்டர் அலலட்சண ஆண்மகன் பட்டத்தை தட்டிச் சென்றார்.அவருக்கு சால்வையும் 25 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

பெய்ட்பிரிட்ஜைச் சேர்ந்த குதக் வாஷே சிரம்பா(45 வயது) இரண்டாவது இடத்தையும் மாஸ்விங்கோவைச் சேர்ந்த சிடோவோ செழிரா (39 வயது) மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.அவர்களுக்கும் சால்வையும் 15 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது.

இது குறித்து மிஸ்டர் அலலட்சண ஆணழகனாக தெரிவான பேலே கூறியதாவது;

இந்த வெற்றியை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.குழந்தைப் பருவத்தில் இருந்தே பலரும் என்னை பரிகசித்து வந்தனர்.இந்தப் போட்டியில் வென்று என் அலலட்சணத்திலும் அழகு உள்ளது என்று உலகிற்குக் காண்பித்துவிட்டேன் என்றார்.அடுத்த ஆண்டு ஹரேரில் இப்போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

040611-1.indd 2
Process Cyan Process Magenta Process Yellow

# அதிகார ருசிக்கு இரையான கனிமொழி



கவிஞராக, மனித உரிமையாளராக எளிமையாக அறியப்பட்ட ஒரு பெண்ணை 'அதிகாரத்தின் ருசி' எந்த எல்லைக்கும் கொண்டு போகும் என்பதற்கு கனிமொழி ஒரு உதாரணம்.

பெரிதாக இலட்சியங்களோ, அரசியல் ஆர்வமோ இல்லாத ஒரு சாதாரண பெண்ணாகத் தான் கனிமொழியின் ஆரம்ப கால வாழ்க்கை இருந்தது. 90களின் ஆரம்பத்தில் கனிமொழியின் முதல் திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட பிரிவுக்குப் பின்னர் அவரது முதல் கவிதைத் தொகுப்பு 'கருவறை வாசனை' வெளிவருகிறது. 'கவிஞர் கனிமொழி' கருணாநிதி என்று அறியப்பட்ட அவர் இலக்கிய உலகில் கொண்டாடப்பட்டதற்கு பின்பாதி பெயரும் ஒரு முக்கிய காரணம்.

சர்ச் பார்க்கில் பள்ளிப்படிப்பும் எத்திராஜ் கல்லூரியில் முதுநிலை பொருளாதாரமும் படித்திருந்த கனிமொழி 92 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஐந்து வருடங்கள் 'தி ஹிந்து' பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணிபுரிந்தார். 97 ஆம் ஆண்டு அரவிந்தனோடு கனிமொழிக்கு திருமணம் நடந்தது. அதன்பிறகு சிங்கப்பூர் 'தமிழ் ஓசை' இதழில் பணி, 'குங்குமம்' பத்திரிகையில் வேலை, 'தி வீக்' பத்திரிகையின் கட்டுரையாளர் என இப்படி ஒரு சாதாரண பெண்ணுக்குரிய வாழ்க்கைதான் கனிமொழியுடையதும்.

ஒரு மாநில முதல்வரின் மகள் என்கிற எந்த பந்தாவையும் கனிமொழியிடம் பார்க்க முடியாது என்பதுதான் அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டுச் சொல்வது. 'ஒருமுறை ஒரு இலக்கிய நிகழ்ச்சிக்குப் போய்விட்டு திரும்புவதற்கு கார் வரவில்லை என என்னோடு ஆட்டோ ஏறி வீட்டுக்கு போனார் கனிமொழி' என்று சொல்கிறார் ஒரு கவிஞர்.

'குஜராத் படுகொலை தொடர்பாக 2002இல் சென்னையில் கூட்டம் ஒன்றை நடத்தினோம். அதற்கு கனிமொழி சில உதவிகளும் செய்தார். அந்தக் கூட்டத்தில் கனிமொழியின் பேச்சு உணர்ச்சி பூர்வமாக அமைந்திருந்தது. ஒரு தாய் என்கிற நிலையில் இருந்து அவர் பேசிய பேச்சு பார்வையாளர்களைக் கண்கலங்க வைத்தது. அந்த காலகட்டங்களில் மனித உரிமை சார்ந்த பணிகளோடுதான் கனிமொழி தன்னை அடையாளப்படுத்தினார்.

பிறகு அரசியலுக்கு வந்த அவர் மதுரை தினகரன் ஊழியர்கள் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது, 'அழகிரி ஒரு அன்பான மனிதர்' என்று குறிப்பிட்டார் கனிமொழி. அரசியல் அவரை எவ்வளவு தூரம் மாற்றிவிட்டது என்பதற்கு இது ஒரு உதாரணம்' என்கிறார் காலச்சுவடு பதிப்பக உரிமையாளர் கண்ணன்.

2004 இல் காங்கிரஸ் – தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் பெரிய வெற்றி பெற்றது. மத்தியில் ஆட்சியில் பங்கு வகித்த தி.மு.க. சொல்வதை எல்லாம் கேட்கும் நிலையில்தான் அன்றைக்கு காங்கிரஸ் இருந்தது. மத்தியில் வளமான துறைகளை தி.மு.க. கையில் வைத்திருந்ததால் கருணாநிதியின் கோபாலபுரம் குடும்பத்தில் பணம் குவியத் தொடங்குகிறது. இது சி.ஐ.டி.கொலனியை எரிச்சல்படுத்துகிறது.

தனக்கும் சரிபாதி உரிமை கேட்டு ராஜாத்தி அம்மாள் கருணாநிதியிடம் போராட ஆரம்பிக்கிறார். இந்தப் பின்னணியில்தான் அதுவரை அதிகம் அறியப்படாத கனிமொழி தி.மு.க.வில் முன்னிறுத்தப்படுகிறார். கனிமொழியின் எல்லா பரிமாணங்களிலும் ராஜாத்தி அம்மாளின் பங்கு அதிகம். தனக்கென்று எந்த போராட்ட பின்னணியோ, கட்சித் தொண்டர்கள் செல்வாக்கோ இல்லாத கனிமொழி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் மேடையாக இலக்கிய உலகைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்.

பாதிரியார் ஜெகத் கஸ்பர் ராஜுடன் இணைந்து 'தமிழ் மையம்' ஆரம்பிக்கிறார். இளையராஜாவை வைத்து பெரும் பணச்செலவில் 'திருவாசகம்' தயாரிக்கப்படுகிறது. கற்பு குறித்து குஷ்பு கருத்து தெரிவிக்க, அவருக்கு எதிராக தமிழ் நாட்டில் பலத்த கண்டனங்கள் எழுந்தன. அந்த நேரத்தில்தான் கனிமொழி, மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரத்துடன் இணைந்து 'கருத்து' என்கிற பெயரில் இணையத்தளம் ஒன்றைத் தொடங்கினார்.

நேரடியாகக் கட்சிக்குள் வராமல் இப்படி மெல்ல, மெல்ல தன்னை முன்னிறுத்திக் கொள்ள ஆரம்பித்தார் கனிமொழி.

டில்லியில் மத்திய அமைச்சர்கள் பெரும் செல்வாக்கோடு இருந்ததால் அவர்களில் யாரையாவது தன்பக்கம் இழுக்க முயற்சிக்கிறது சி.ஐ.டி.கொலனி. பெரிய பின்புலம் ஏதும் இல்லாத மத்திய அமைச்சர் ஆ.ராசாவும், சி.ஐ.டி.கொலனி குடும்பம் தனக்கு ஆதரவாக இருக்கும் என நம்புகிறார். இதுதான் ராசா சி.ஐ.டி.கொலனியில் ஐக்கியமான கதை.

ராசா வனத்துறை அமைச்சராக இருந்தபோதே ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தொடர்புடைய கட்டுமான நிறுவனங்கள் மும்பையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்குகிறார். இதன்மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு சி.ஐ.டி.கொலனியோடு ராசா நெருக்கமானதாக சொல்லப்படுகிறது.

2006இல் தி.மு.க. மறுபடியும் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிக்க அப்போது சி.ஐ.டி. கொலனி தனி அதிகார மையமாக மாறியிருந்தது. ராஜாத்தி அம்மாளுக்கு ஆதரவான ஐ.ஏ.எஸ். – ஐ.பி.எஸ்.அதிகாரம் என பெயர்கள் அடிபடத் தொடங்கின.

2007 ஜனவரியில் கனிமொழியின் தமிழ்மையம் 'சங்கமம்' நிகழ்ச்சியை நடத்துகிறது. அப்போது தமிழக சுற்றுலாத்துறை சார்பில் கனிமொழி பெயரிட்டு அரசு ஆணை அனுப்பப்படுகிறது. தொடர்ந்த ஆண்டுகளில் சங்கமம் நிகழ்ச்சியும் தமிழ் மையம் சார்பில் மார்த்தான் போட்டிகளும் கோலாகலமாக நடத்தப்பட்டன. இதில் அனுசரணை செய்திருந்த நிறுவனங்களில் பெருமளவு ஸ்பெக்ட்ரம் ஊழலில் சம்பந்தப்பட்டிருப்பதாக இப்போது சொல்கிறது சி.பி.ஐ.

தினகரன் மதுரை அலுவலகம் எரிப்பைத் தொடர்ந்து மாறன் சகோதரர்களுக்கும் கோபாலபுரத்திற்கும் முட்டிக்கொண்டது. மாறனின் மத்திய அமைச்சர் பதவி பிடுங்கப்பட டில்லியில் தி.மு.க.வின் தீர்மானிக்கும் பொறுப்பை கனிமொழிக்குக் கொடுத்தார் கருணாநிதி.

2007 இல் கனிமொழி ராஜ்ய சபா எம்.பி.யாக டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதன்பிறகு வேலைவாய்ப்பு முகாம் என தமிழகத்திலும் கட்சி ரீதியாகத் தன்னை வலுப்படுத்திக் கொள்ளத் தொடங்கினார். கனிமொழி கட்சியில் தனக்கென ஒரு குழுவை உருவாக்கத் தொடங்கினார்.

டில்லியில் ஆ.ராசா மூலம் கனிமொழிக்கு ஏராளமான தொடர்புகள் கிடைக்கின்றன. சரத்பவார். அவரது மகள் சுப்ரியா அவர்கள் மூலம் ஷாகித் பல்வா, நீரா ராடியா என தொடர்புகள் கிடைக்கிறது. டில்லியின் செல்வாக்கான இடங்களில் கிடைத்த தொடர்புகள் அவரை யோசிக்க விடாமல் செய்கிறது. இந்த நேரத்தில் கலைஞர் டி.வி.ஆரம்பிக்கும் வேலையையும் கனிமொழியிடம் கருணாநிதி கொடுக்கிறார்.

ஸ்பெக்ட்ரம் 214 கோடி ரூபா கலைஞர் டி.வி.யாக உருமாறுகிறது. இந்த இடங்களில்தான் கனிமொழி தவறு செய்கிறார். சிறிய குழந்தைக்கு கைக்கடங்காத இனிப்புகளைக் கொடுத்தால் அது எப்படி நடந்து கொள்ளுமோ, அப்படியே கனிமொழியும் நடந்து கொள்கிறார். சொந்த அப்பாவைக் கூட நம்பாமல் தன்னிச்சையாக முடிவெடுக்கிறார். அவர் கருணாநிதியை நம்பியிருந்தால், மாட்டிக் கொள்ளாமல் எப்படி தவறு செய்வது என்று அவர் சொல்லிக் கொடுத்திருப்பார். இன்று திகார் செல்ல வேண்டிய நிலை வந்திருக்காது.

மென்மையான மனித உரிமைகளில் ஆர்வம் கொண்ட பெண் என்கிற வகையில் ஈழ ஆதரவாளர்கள் கனிமொழி மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால், ஈழ விவகாரத்திலும் கனிமொழி துரோகம்தான் செய்தார்.

கனிமொழியின் இந்த அசுர வளர்ச்சி கோபாலபுரம் குடும்பத்திற்கு எரிச்சலை அதிகப்படுத்தியது. மாறன் சகோதரர்களும் கோபாலபுரத்துடன் நெருக்கமாகி விட, குடும்பத்திற்குள்ளேயே கனிமொழிக்கு எதிரிகள் அதிகமானார்கள். கனிமொழி தான், 'என் அண்ணன், என் பெரியம்மா' என்றெல்லாம் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் யாரும் இவரை அணுக்கமாக நினைக்கவில்லை. இன்றைய சிறையில் இருக்கும் கனிமொழிக்காக கோபாலபுரத்தில் கருணாநிதியைத் தவிர யாரும் வருத்தப்படவில்லை.

'கனிமொழியின் இந்த நிலை திராவிட அரசியலில் பெண்ணின் இடத்தையும் முக்கியத்துவத்தையும் கேள்விக்குறியாக்கி உள்ளது' என்கிறார் கவிஞர் மாலதி மைத்ரி. 'பெரியார் பாசறையில் இருந்து வந்த கருணாநிதியின் மோசமான நடத்தையினாலும் குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கத்தாலும் இன்று கனிமொழி பலியாகி இருக்கிறார்.

கருணாநிதியின் தவறான முன்னுதாரணத்தினால் கனிமொழிக்கு சமூகத்திலும் அரசியலிலும் அடையாளம் மறுக்கப்பட்டிருந்தது. பால்ய வயதில் கருணாநிதிதான் தன் தந்தை என கனிமொழியால் வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. பிற்காலத்தில் அரசியலுக்கு வந்த பிறகு தன் குடும்ப உறுப்பினர்களுடன் போட்டிபோட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

அதிகார போதையும் ஜெயித்தே ஆகவேண்டும் என்கிற வெறியும் இன்று அவரை சிறைக்கு அனுப்பியிருக்கிறது. அவருடைய நண்பர்களும் தன்னுடைய இலாபத்துக்காக அவரது துதிபாடிகளாகவே இருந்துவிட்டது. கனிமொழியின் துரதிர்ஷ்டம் தான் என்கிறார் மாலதி மைத்ரி.

அடையாளம் மறுக்கப்பட்ட ஒரு பெண்ணாக ஒரு எழுத்தாளராக ஒரு அரசியல்வாதியாக இன்று சிறைவாசியாக கனிமொழி எழுதிய கவிதை ஒன்றைக் குறிப்பிடலாம் சரியாக இருக்கும்.

'அப்பா சொன்னாரென
பள்ளிக்குச் சென்றேன்
தலை சீவிக் கொண்டேன்
நண்பர்களைத் தவிர்த்தேன்
கல்யாணம் கட்டிக் கொண்டேன்
காத்திருக்கிறேன் என்முறை
வருமென்று...'

ப்ரியா தம்பி

000614.indd 33
Process Cyan Process Magenta Process Yellow

# பச்சை இல்ல வாயுக்களின் அதிகரிப்பும்




மனிதன் இன்று எதிர்நோக்கும் முக்கிய சவால் புவி வெப்பமடைதல் (*Global Warmaing*) ஆகும். ஆரம்பகாலம் முதல் இயற்கைக் காரணிகளால் புவி வெப்பமடைந்து விடுகின்ற செயற்பாடு மெதுவாகவே இடம்பெற்று வந்த போதிலும் மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் புவி மிக விரைவாக வெப்பமடைந்து வருகின்றது.

புவி வெப்பமடைவதில் பிரதான பங்கினை வகிப்பது பச்சைய வீட்டுவாயுக்களாகும். காபனீரொட்சைட், மெதேன், கந்தகவீரொட்சைட், நைதரசன் ஒட்சைட் போன்ற பச்சைய வீட்டு வாயுக்கள் புவியை சூடாக்குவதில் பிரதான பங்கு வகிக்கின்றன. இவற்றில் காபனீரொட்சைட் புவிவெப்பமடைவதனை மிக அதிகமாகத் துரிதப்படுத்துகின்றது.

பச்சை வீட்டுவிளைவு (*Green house effect*) என்பது புவிமேற்பரப்பில் இயற்கையாக அல்லது செயற்கையாக சூரிய ஒளிக்கதிர்களை (வெப்பத்தை) வெளியேறவிடாது தடுத்து வைத்திருக்கும் செயற்பாடாகும். இதன் போது வளிமண்டலம் சூடாவதால் புவியும் சூடாகின்றது.

சூரியனிலிருந்து புவியை வந்தடையும் ஒளியானது சிதறல், தெறித்தல், உறிஞ்சல் போன்ற பல்வேறு செயற்பாடுகளுக்கு உட்படுகின்றது. இதன் போது பூமிக்கு தேவையான வெயில் மட்டும் பெறப்படும். அதே வேளை சூரியக்கதிரானது வளிமண்டலத்தில் பட்டு தெறிப்படைந்து மீண்டும் வானவெளிக்கு அனுப்பப்படுகின்றது. அது மட்டுமன்றி தாவரங்கள், வளிமண்டலம் போன்றவற்றினால் உறுஞ்சும் செயற்பாட்டுக்கும் உட்படுகின்றது.

குறிப்பாக வளி மண்டலத்தில் காணப்படும் சில வாயுக்கள் அகச்சிவப்பு, புற ஊதாக் கதிர்களை உறுஞ்சுவதுடன் அவை தெறிப்படையவும் காரணமாக அமைகின்றது.

ஆனால் பச்சைய வீட்டு வாயுக்கள் வளிமண்டலத்தில் அதிகரிக்கும் போது அவை புவியை வந்தடையும் சூரிய ஒளிக்கதிர்களை தெறிப்படையவிடாது செய்வதால் அவை வளிமண்டலத்தைச் சூடாக்குகின்றன. இதனால் புவியும் சூடாகின்றது. புவி சூடாகின்றமையானது உலகக் காலநிலையில் குழப்பத்தை ஏற்படுத்தி மனிதனின் அழிவுக்கு வித்திடுகின்றது.

பச்சைய வீட்டு விளைவை 1824 இல் ஜோசப் போரியர் என்பவர் முதலில் கண்டறிந்தார். அவரைத் தொடர்ந்து 1858 இல் ஜோன் டின்டால் என்பவரும் 1896 இல் சவந்தே அற்ஹீநியாஸ் என்பவரும் பச்சைய இல்ல

விளைவு தொடர்பாக சரியான முறையில் தமது பரிசோதனைகளை நடத்தியிருந்தார்கள்.

மேலும் புவியின் வளிமண்டலத்தில் மாத்திரம் பச்சைய இல்லவாயுக்கள் இல்லாவிடின் புவிவெப்பநிலை மிக விரைவாக குறைந்திருக்கும் பச்சை இல்ல வாயுக்கள் புவியின் வெப்பநிலையை குறையாது பேணுகின்றது.

மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் அதிகளவான பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேறுகின்றன. இவை வளிமண்டலத்தையும், பூமியையும் சூடாக்குவதுடன் காலநிலையில் பாரிய மாற்றத்தினையும் ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக காபனீரொட்சைட் வாயுவின் வெளியேற்றம் இன்று அதிகரித்துள்ளது. கடந்த வருடத்தில் மாத்திரம் 32 கிக்காதொன் காபனீரொட்சைட் வாயு வெளியேறியுள்ளது. மவுனலோவாவிலுள்ள சூழல் அவதானிப்பு நிலையத்தின் படி 1960 களில் வளியில் $CO_2$ இன் செறிவு 313 தொன் ஆகவும் 2010 இல் 389 பிவி எம் அளவு $CO_2$ வாயு இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# அதிகரிக்கும் அனர்த்தங்களும்



கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் வளியில் காபனீரொட்சைட்டின் செறிவு 180 ppm ஆகவே காணப்பட்டது. எனினும் அது தற்போது மிக விரைவாக அதிகரித்து வருகிறது.

பச்சைய வீட்டுவாயுக்களை வளிமண்டலத்தில் அதிகளவில் சேர்க்கும் பணியில் 70 சதவீத பங்கினை அபிவிருத்தியடைந்த நாடுகள் வகிக்கின்றன. பொருளாதார பின்னடைவுகளை எதிர்கொள்வதற்காக அபிவிருத்தி அடைந்த நாடுகள் கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிக்கின்றன. அதன்போது தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகைகளில் அதிகளவில் காபனே காணப்படுகின்றன.

அதுமட்டுமன்றி பெற்றோலிய எரிபொருட்களை அதிகளவில் எரித்தல், காடழிப்பு போன்றனவும் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பிற்கு காரணமாக அமைகின்றன. காபனின் அதிகரிப்பால் காடழிப்பே பிரதான காரணியாக அமைகின்றது.

இந்நிலையில் 1990களிலிருந்து புவி வெப்பநிலை மிக விரைவாக அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. துருவப்பனிப்பாறைகள் உருகுதல், கடல்மட்டம் உயர்வடைதல், பாலைவனமாதல், வறட்சி, நீர்நிலைகள் வற்றுதல், சில தாவர விலங்கினங்கள் முற்றாக அழிவடைதல் போன்ற பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

அது மட்டுமன்றி ஓசோன் படலத்துவாரத்திற்கும், புவிவெப்ப அதிகரிப்பிற்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பது அறியப்பட்டுள்ளது.

இதேவேளை புவிவெப்பமடைதலுக்கும் பச்சை வீட்டு வாயுக்களுக்குமிடையேயான தொடர்புகள் பற்றி அறியப்பட்டதன் பின்னர் பச்சைய வீட்டு வாயுக்களை கட்டுப்படுத்துவதற்காக கியோட்டா வரைபு ஏற்படுத்தப்பட்டது. இந்தவரைபில் காபன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு சகலநாடுகளும் உடன்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டபோதிலும் அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் அதற்கு உடன்படவில்லை.

ஏனையகாலங்களை விட கடந்த வருடத்தில் மாத்திரம் 30.6 கிக்கா தொன் காபனீரொட்சைட் வாயு வளிமண்டலத்தில் சேர்ந்துள்ளது. இதனால் புவிவெப்பநிலை மேலும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது புவியில் வாழும் ஒட்டுமொத்த உயிரினங்களின் அழிவிற்கு வழிகோலும் ஓர் செயற்பாடு என்பதுடன், இனிவரும் காலங்களில் புவியில் அசாதாரண நிலையிலான காலநிலை மாற்றச் செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.கஜலக்ஷ்மி

040611-1.indd 4
Process Cyan Process Magenta Process Yellow



உயிர்கொல்லி நோயாக டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களினால் இன்று வைத்தியசாலைகள் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. பச்சிளம் பாலகர்கள் முதல் முதியவர்கள் வரை, இந்நோயின் கோரப்பிடிக்குள் சிக்கி வைத்திய சாலைகளை நோக்கி படையெடுத்துக்

# பலியெடுக்கும் டெங்கு பாிதவிக்கும் மக்கள்

கொண்டிருக்கின்ற நிலையில் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது சுகாதார அமைச்சு திண்டாடி வருகின்றது.

கடந்த சில வருடங்களாக எமது நாட்டில் தீர்வு காணப்பட முடியாத ஆபத்தான நோயாக டெங்கு உருவெடுத்து வருகின்றது. இதன் தாக்கம் வருடாந்தம் அதிகரிப்பதுடன் உயிரிழப்புக்களும், பாதிப்புக்களும் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

டெங்கு நோயை ஒழிப்பதற்கு அரசாங்கமும், சுகாதாரத் துறையினரும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த போதிலும், இதுவரை எவ்விதப் பலனும் கிடைக்கவில்லை.

இவ்வாறு அரசாங்கம் மட்டுமல்ல இராணுவம், பொலிஸ், அரச நிறுவனங்கள் டெங்கு ஒழிப்பு பணிகளை முன்னெடுக்கின்ற போதும், பொதுமக்களின் ஒத்துழைப்பு கிடைக்காமையினால் அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

நாட்டின் பலபகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் இருந்த போதிலும், தலைநகரில் டெங்கு நோயாளர்களின் பெருக்கம் வேகமாக அதிகரித்துள்ளதை காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக கொழும்பு மாநகரசபைக்குற்பட்ட பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்தளவில் காணப்படுகிறது.

இது தொடர்பாக கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் கூறுகையில்; இந்த வருடத்தில் கொழும்பு நகரில் மாத்திரம் 1976 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அடுத்ததாக கம்பஹாவில் 709 பேரும், மட்டக்களப்பில் 465 பேரும், களுத்துறையில் 361 பேரும், இரத்தினபுரியில் 289 பேரும், குருநாகலையில் 253 பேரும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயினால் மே மாதத்தில் மாத்திரம் 1235 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டனர். இதில் கொழும்பு மாநகர சபைக்குற்பட்ட பகுதியில், 833 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளனர். இதில் 310 டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாநகர சபைக்கு வெளியில் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு கொழும்பு நகரில் டெங்கு நோயாளர்கள் என சந்தேகிக்கப்பட்ட 8885 பேரில் 75 வீதமானோர் டெங்கு நோயாளர்கள் என உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையானது கொழும்பு நகரில் கடந்த வருடங்களைவிட அதிகளவானோர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதை காட்டுகிறது. 2010 இல் கொழும்பு நகரில் 600 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார அமைச்சும், சுகாதார உத்தியோகத்தர்களும் இணைந்து கொழும்பு நகரை துப்புரவு செய்யும் பணிகளை கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்த போதிலும், பொதுமக்களின் ஒத்துழைப்பின்மையும், கவனயீனத்தினாலுமே நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

கொழும்பு நகரில், அதிகளவான பாடசாலை மாணவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 5 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட 439 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு தனியான சிகிச்சை முறை அமுல்படுத்தப்படுகிறது.

டெங்கு நுளம்புகள் அதிகளவில் பரவும் இடங்களாக



கொழும்பு தேசிய வைத்தியசாலை, இராணுவ ஆஸ்பத்திரி, தாதியர் விடுதி, சிறுவர் மருத்துவமனை, ஆகியவற்றின் சுற்றுப்புறச் சூழல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இவற்றை பாதுகாக்க விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஜூன் 20–26 முதல் நுளம்பு தடுப்பு வாரமாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. கொழும்பு உட்பட 11 மாவட்டங்கள் டெங்கு பரவும் ஆபத்தான பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

களுத்துறை, கம்பஹா, அம்பாந்தோட்டை,காலி, புத்தளம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, குருநாகல், திருகோணமலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களே டெங்கு பாதிப்பு அதிகளவுக்கு ஏற்படும் இடங்களாகும்.

கடந்த வாரங்களாக டெங்கு நோய் உள்ளிட்ட நுளம்புகளால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நுளம்பு தடுப்பு வாரத்தின் போது குடியிருப்புக்கள், அரச, தனியார் நிறுவனங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளதுடன், ஆயுதப் படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்பினின் உதவியும் இந்தத் தடுப்பு



வாரத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்ட திகதிகளில் விமானங்களை பயன்படுத்தி நுளம்பு பெருகும் பகுதிகளை விமானப்படை பரிசீலனை செய்யவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு நகரில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 50 சதவீதமானோர் பாடசாலை மாணவர்களாகவுள்ளதுடன், எமது நாட்டில் டெங்கினால் பாதிக்கப்பட்டோரில், 7 வீதமானோர் கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சுற்றுப்புறங்களை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதும், வருடாந்தம் டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்கள், உயிரிழப்போரின் எண்ணிக்கையில் எந்தவித வீழ்ச்சியும் ஏற்படவில்லை.

அத்தோடு, கொழும்பு நகரை அண்மித்த, தெகிவளை, கல்கிசை, மொரட்டுவைப் பகுதிகளில் டெங்கு நோயாளர்கள் 200 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதேவேளை கொழும்பு மாநகரசபைக்குற்பட்ட பகுதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களில் 20 வீதமானோருக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்படுவதாக டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக, ஏனைய இடங்களை விடவும், தலைநகரிற்கு பல கோடி ரூபா செலவிடப்பட்ட போதும், சமூகத்திலிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புக்கள் போதுமானவையாக இல்லாமையினால் இதில் அரசு எவ்வித வெற்றியையும் காணவில்லை.

கொழும்பு நகரில் டெங்கு நோய் பரவும் இடங்களில் பாடசாலைகள் குறிப்பிடத்தக்கவையாகவுள்ளன. பாடசாலை சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தியும், அதனை நடைமுறைப்படுத்தாக பல அதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இந்நிலையில் கொழும்பு மாநகரசபை விசேட ஆணையாளர் பாடசாலைச் அதிபர்களை அழைத்து பாடசாலைச் சூழலை சுத்தமாக, நுளம்புகள் பெருகாத வகையில் வைத்திருக்குமாறு கோரியுள்ளார்.

இவ்வாறு அரசாங்கம், சுகாதார அமைச்சு, கொழும்பு மாநகரசபையினர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதற்கு எதிராக பல நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும், ஒவ்வொரு தனிமனிதனும் பூரண ஒத்துழைப்பு வழங்காத வரை வெற்றிகாண முடியாது.

எனவே ஆபத்துமிக்க இந்நோயை இல்லாதொழிக்க பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகவுள்ளது.

எனவே டெங்கு நுளம்பை ஒழிக்கும் திட்டத்திற்கு, சுகாதார அமைச்சு, கொழும்பு மாநகர சபையினருடன் பொதுமக்கள் இணைந்து செயற்படவேண்டும். எமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் உயிர்கொல்லி நோயான டெங்கிலிருந்து எம்மை மட்டுமல்ல எமது அயலவர்களையும் பாதுகாக்க முடியும்.

எச்.ஹுஸ்னா

மருத்துவம்

# குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் குறைபாடுகள்



பொதுவாக பெரும்பாலான குழந்தைகள் ஆரோக்கியமான இதயத்துடன் தான் பிறக்கிறார்கள்.அவர்களுடைய இதயத்தின் அமைப்பிலோ அல்லது அதன் செயற்பாட்டிலோ எந்தவிதக் குறைபாடும் இருப்பதில்லை. ஆனால் சில குழந்தைகள் மட்டும் சிதைவுபட்ட அல்லது உருக்குலைந்த இதயத்துடன் பிறக்கின்றன.

பிறவியிலேயே குழந்தைகளுக்கு இத்தகைய இதயக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் இன்னும் முழுமையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் சில அடிப்படைக் காரணங்களை மருத்துவ உலகம் பட்டியலிடுகிறது.மரபுரீதியாக நமது பண்புகளை நிர்ணயிக்கும் குரோமோசோம்களின் அமைப்பில் இயற்கையாகவே குறைபாடுகள் இருந்தால் பிறக்கும் போதே குழந்தைகளுக்கு உருக்குலைந்த இதயம் உருவாகக்கூடும்.தாய்மைப்பேறு அடைந்த சில பெண்கள் கருவுற்ற தொடக்க நிலையில் வைரஸ் தாக்குதலுக்கு ஆளாகி பலவகையான நோய்களுக்கு இலக்காக நேரிடும்.இந்த வைரஸானது கருவில் வளரும் இதயத்தையும் பாதித்து அதன் அமைப்பையோ அல்லது செயற்பாட்டையோ சிதைத்துவிடும்.எனவே பெண்கள் கருவுற்ற தொடக்க நிலையில் வைரஸ்களால் ஏற்படும் பலவகையான தொற்றுநோய்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

கருவின் ஆரம்பத்தில் கர்ப்பிணிப் பெண்கள் ரூபெல்லா (RUBELLA) என்ற ஜேர்மன் தட்டம்மை நோய்க்கு ஆளானால் கருவானது பலவகைகளில் பாதிக்கப்படும்.அதோடு இந்த நோய் இதயத்தையும் உருக்குலைத்துவிடுகிறது.இந்நோயை தாய்மைப் பருவ தட்டம்மை என்றும் சொல்வதுண்டு.பரம்பரை காரணமாகவும் பிறவியிலேயே இதயக் குறைபாட்டு நோய்களோடு குழந்தைகள் பிறக்கலாம்.ஒரு குடும்பத்தில் பெற்றோரோ அல்லது அவர்களின் முன்னோர்களோ இதயக்குறைபாட்டால் பாதிக்கப்பட்டு இருந்தால் அந்தக் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமான குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளை விட இதயக் குறைபாட்டு நோய்களால் பாதிக்கப்பட வாய்ப்பு அதிகம்.கர்ப்பகாலத்தில் தாய்மார்கள் அறியாமல் செய்யும் சில தவறுகள் கூட இதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.கருவுற்ற தொடக்க காலங்களில் தாய்மார்கள் சாதாரண உடல் பிரச்சினைகளுக்காக மருத்துவர்களின் தக்க அறிவுரையும் பரிந்துரையும் இல்லாமல் தாங்களாகவே பலவகையான மருந்துகளை எடுத்துக் கொள்வார்கள்.இந்த மாத்திரைகளைக் கட்டுப்பாடின்றி பயன்படுத்தும்போது அது கருவில் உள்ள குழந்தையின் இதயத்தையும் கடுமையாகப் பாதிக்கிறது.கர்ப்ப காலத்தில் பெண்கள் அளவுக்கு அதிகமாக எக்ஸ்ரே (X-ray) கதிர்வீச்சுக்கு ஆளானாலும் கருவில் உள்ள குழந்தையின் இதயத்தில் உருக்குலைவு ஏற்படுகிறது.

இவ்வாறு இதயக் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கினர் தங்கள் முதலாண்டு நிறைவைக் காண்பதற்கு முன்னரே இறந்துவிடுகிறார்கள்.

பொதுவாக பிறவியிலேயே குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் குறைபாடுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1.இதயத் தடுப்புச் சுவர்களில் ஏற்படும் ஓட்டைகள்

2.இதய வால்வுகளில் ஏற்படும் குறைபாடுகள்

3.இதயத்தின் இரத்தக் குழாய்கள் உருவாகும்போது ஏற்படும் குறைபாடுகள்.ஓட்டை விழுந்த இதயத்தோடு பிறந்த குழந்தைகள் பற்றி பரவலாக செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள்.இதயத்தில் எப்படி ஓட்டை விழும்?வலப் பக்கத்தில் அசுத்த இரத்தமும் இடப்பக்கத்தில் தூய்மையான இரத்தமும் இருக்குமாறு இதயத்தை இரு தனிப் பகுதிகளாக தடித்த தசைகளால் ஆன தடுப்புச் சுவர்கள் பிரிக்கின்றன.ஆனால் சில பிறவிக் குறைபாடுகளால் இந்தச் சுவர்களில் ஓட்டைகள் விழக்கூடும்.

இதயத்தின் வலது,இடது மேல் அறைகளைப் பிரிக்கும் தடுப்புச் சுவர் உருவாகும்போது அதில் ஓட்டை விழ வாய்ப்புகள் உள்ளன.இவ்வாறு இதய மேல் அறைகளைப் பிரிக்கும் தடுப்புச் சுவரில் விழும் ஓட்டையைக் குங்கும வண்ண ஓட்டை (PINK HOLE) என்று சொல்வார்கள்.இதையே இதய மேல் அறை தடுப்புச் சுவர் குறைபாடு (Atrial Septal Defect-ASD) என்றும் குறிப்பிடுவதுண்டு.

இதயத்தின் கீழ் அறைகளைப் பிரிக்கும் தடுப்புச் சுவர் உருவாகும்போது தடுப்புச் சுவரானது முழுமையாக அடைபடாமல் அங்கு விழும் ஓட்டையை கீழ் அறை தடுப்புச் சுவரில் விழும் குறைபாடு (Ventricular Septal Defect VSD) என்று சொல்வார்கள்.குழந்தைகளுக்கு நீலநிறக் குழந்தை நோய் (Blue Baby Heart Disease) என்ற குறைபாடும் பரவலாகக் காணப்படுகின்றது.கர்ப்பப் பையில் குழந்தை வளரும்போது தாயின் தொப்புள் கொடியின் மூலமாக குழந்தையானது தனக்குத் தேவையான உயிர்வளி,ரத்தம்,ஓமோன்கள்,உயிர்ச்சத்துகள் ஆகியவற்றைப் பெறுகிறது.இதனால் வளரும் குழந்தையின் நுரையீரல் செயலிழந்து இருக்கும்.தொப்புள் கொடியின் வழியாக குழந்தைக்குச் செல்லும் ரத்தமானது குழந்தையின் நுரையீரலுக்குச் செல்லாமல் தடுக்கக் குழல் போன்ற அமைப்பு உள்ளது.இந்தக் குழல் போன்ற அமைப்பானது பொதுவாக நூற்றுக்கு 99 குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் இயற்கையாக மூடிவிடும்.ஆனால் ஒரு சதவீத குழந்தைகளுக்கு பிறக்கும் சமயத்தில் இந்தக் குழல் இயற்கையாக மூடப்படாமல் அப்படியே இருந்துவிடும்.இயற்கையோடு முரண்பட்ட இந்த நிலையை குழல் மூடா நிலை (PATENT DUCTUS ARTEROSIS) என்று சொல்வார்கள்.இந்த நிலைய்யும் இதயத்தின் நலத்தைப் பாதிக்கிறது.

இயற்கைக்கு முரணாக அமைந்த இந்தக் குழலின் வழியாக அசுத்த ரத்தமும் தூய்மையான ரத்தமும் கலப்பதால் குழந்தையின் நாக்கு,உதடுகள்,விரல்கள்,நகங்கள்,ஆகியவை நீலநிறமாக மாறிவிடும்.இந்த முரண்பாட்டால் குழந்தைக்குத் தேவையான தூய்மையான ரத்தம் கிடைப்பதில்லை.இதனால் இந்த நோயை நீல நிறக்குழந்தை நோய் என்று சொல்வார்கள்.

பிறந்த குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் முக்கிய குறைபாடுகளில் ஒன்று ஃபேலட்டின் நால்வகைக் குறைபாடுகள் (Fallots Tetralogy) என்ற பிறவி நோயாகும்.பிறவியிலேயே குழந்தைகளுக்கு இதயத்தில் ஏற்படும் இத்தகைய குறைபாடுகளை முதலில் கண்டறிந்தவர் ஃபேலட் என்ற பிரான்ஸ் நாட்டு மருத்துவர்தான்.அவரது நினைவாகத்தான் இந்தக் குறைபாடுகளுக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.இந்தக் குறைப்பாடுகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.நுரையீரல் ரத்தக் குழாய் இறுக்கம் (Pulmonary Stenosis) இதயக் கீழ் அறையில் ஓட்டை விழுதல் (VSD) மகா தமனி வலப் பக்கம் நிலைக்கொள்ளல் (Dextra Position of the Aorta) இடது கீழ் அறையானது பெருக்கம் அடைதல் (Ventricular Hypertrophy) மேற்கூறிய நான்கு வகையான குறைபாடுகளை ஒன்று சேர்த்துத்தான் ஃபேலட்டின் நால்வகைக் குறைபாடுகள் என்கிறார்கள்.

இதயத்தின் வலப்பக்கத்தில் உள்ள அசுத்தமான ரத்தமானது கீழ் அறையில் உள்ள ஓட்டையின் வழியாக இடப்பக்கம் உள்ள தூய்மையான ரத்துத்துடன் கலந்து மகா தமனியின் வழியாக குழந்தையின் உடலில் உள்ள பல பாகங்களுக்குச் செல்வதால் குழந்தையின் உடல் முழுவதும் நீலம் பாய்ந்து குழந்தையானது நீலநிறக்குழந்தையாக (Blue Baby) காட்சி அளிக்கும்.இதயத்தில் உள்ள முக்கிய வால்வுகள் இயற்கையாக அமைந்துள்ள நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை இழந்து சில சமயங்களில் குறுக்கம் (Stenosis) அடைவதுண்டு. இந்த நிலையை வால்வுகளின் குறுக்கம் என்று பொதுவாகச் சொல்வார்கள்.பொதுவாக மகா தமனியில் உள்ள வால்வும் நுரையீரல் தமனியில் உள்ள வால்வும் இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகி இதயமும் பாதிக்கப்படுகிறது.

Process Cyan Process Magenta Process Yellow

# அழகை, ஆரோக்கியத்தை பாதுகாக்கும் புதிய கண்டுபிடிப்பு



பெண்களின் அழகை தீர்மானிப்பதில் அவர்களின் மார்பகங்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன. அந்த மார்பகங்களின் அழகு அவர்கள் அணியும் மார்புக் கச்சைகளில் (பிரா) தங்கியுள்ளது. ஆனால், பொருத்தமற்ற மார்புக் கச்சைகள் பெண்களின் அழகை மாத்திரமல்லாமல் அவர்களின் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிக்கின்றன.

போலந்திலுள்ள ஆரோக்கிய தாய்மார்களுக்கான நிறுவகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் பெண்களின் மார்பகங்களை இயற்கையாக அசையவிடும் அதேவேளை மார்பகங்களை அழகாக வைத்துக்கொள்ளக் கூடியதாகவும் உள்ள பிராவை புதிததாக வடிவமைத்துள்ளனர்.

மார்பகங்களை அழுத்தாத அதேவேளை அவற்றின் வடிவத்தை பேணக்கூடிய பிராக்களை வடிவமைப்பதற்கு விஞ்ஞானிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஏனைய நவீன பிராக்களினால் ஏற்படும் ஆரோக்கிய பாதிப்புகளைத் தவிர்ப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது மேற்படி குழுவானது கணினி உதவியுடன் பிராக்களின் அழுத்தப் புள்ளிகளை நீக்கி, மிகச் சரியான 'ஆரோக்கிய பிராவை' வடிவமைத்துள்ளதாக அறிவித்துள்ளது. மேற்படி விஞ்ஞானிகள் இரண்டு வருடங்களை செலவிட்டு மார்பகங்கள் அழுத்தத்திற்கு உள்ளாகாமல் இயற்கையாக அசைய இடமளிப்பதன் மூலம் அதிகபட்ச சௌகரியத்தை வழங்குவதுடன் புற்றுநோயிலிருந்தும் பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் இந்த மார்பக கச்சையை உருவாக்கியுள்ளனர்.

பெண்கள் அடிக்கடி மிகச் சிறிய அளவுடைய மார்பக கச்சைகளை வாங்குகின்றனர். ஆனால், அவை உண்மையில் அசௌகரியமாக இருப்பதுடன் பார்வைக்கும் அழகாக இருக்காது. அத்துடன் பல நோய்கள் ஏற்படுவதற்கும் ஏதுவாய் அமைந்து விடுகின்றன என மேற்படி விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் மாரெக் ஸாட்ரோஸ்னி தெரிவித்துள்ளார்.

மார்புக் கச்சைகளின் கொளுக்கிகள் மிக இறுக்கமாக அல்லது மிகவும் தளர்வாக இருப்பதால் மார்பகத்தின் திசுக்கள் அசாதாரணமாக அசைகின்றன. இந்நிலை மார்பகப் புற்றுநோய்க்கு வழியமைக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். 'கொரின்' எனும் நிறுவனம் இந்த பிராவை தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மொரியஸ் ஹன்க்ஸ்கா இது தொடர்பாக கூறுகையில், ''இந்த பிரா தயாரிக்கப்பட்ட முறையை விளக்குவது கடினமானது. மார்பகங்களை பிராக்கள் அழுத்தும் புள்ளிகளை கணினியில் முப்பரிமாண முறையில் கண்டறிந்து துல்லியமான மாதிரி கிடைக்கும்வரை படிப்படியாக அந்த அழுத்தப்புள்ளிகளை நீக்கினோம். இதை தயாரித்த பின்னர் பெண்களுக்கு அணிவித்து சோதனை நடத்தினோம்'' என்றார். ஐரோப்பாவில் விற்பனையாகும் இந்த மார்புக் கச்சையின் விலை 50 யூரோக்களாகும்.

# இயற்கை விரும்பிகளின் சொர்க்கம்

நிர்வாண இயற்கை விரும்பிகளை மகிழ்விக்கும் வகையில் பிரிட்டனின் பேர்மிங்ஹாம் பிராந்தியத்தில் நிர்வாண ஹோட்டலொன்று திறக்கப்பட்டுள்ளது. ஏர்டிங்டன் நகரிலுள்ள இந்த நிர்வாண ஹோட்டல் இயற்கை விரும்பிகளின் சொர்க்கமாக இருக்குமாம்.



பிரிட்டனின் முதலாவது நிர்வாண ஸ்பா ஹோட்டல் இதுவென இந்த ஹோட்டலின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். வாடிக்கையாளர்கள் இங்கு ஆடையின்றி இருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த உல்லாச ஹோட்டலில் 77 அறைகள் உள்ளன.

நீராவிக்குளியல், மசாஜ் நிலையம், அழகு நிலையம், உடற்பயிற்சி நிலையம் உட்பட்ட வசதிகளை இந்த ஹோட்டல் கொண்டுள்ளது.

காலநிலைக்கேற்ற இடத்தை நாங்கள் தெரிவு செய்துள்ளோம். பிரிட்டனில் இயற்கைத்துவ நிகழ்வுகள் அநேகமாக உள்ளக நிகழ்வுகளாகவே உள்ளன. பொதுவாக 365 நாட்களும் இப்படி இருக்க வேண்டுமென்றால் இந்த நிலை தான் காணப்படும். ஏனெனில் பிரித்தானிய கால நிலை நம்பமுடியாதது என ஹோட்டல் உரிமையாளர் டிம் ஹிக்ஸ் தெரிவித்துள்ளார்.

# வில்லங்கமான ஆய்வு



இங்கிலாந்தில் ஒரு ஆய்வை நடத்தியுள்ளனர். உங்களவருடன் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை செக்ஸ் உறவு வைத்துக் கொள்வீர்கள் என்பதுதான் அந்த ஆய்வில் கேட்கப்பட்ட கேள்வி. இதில் சில சுவாரஸ்யமான தகவல்கள் தெரிய வந்தது.

'ஆடாம் அன்ட் ஈவ்' என்ற ஆண், பெண்களுக்கான செக்ஸ் தொடர்பான பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனம் தான் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியது.

அந்த ஆய்வில் கலந்து கொண்டவர்களில் 3 சதவீதம் பேர் மட்டுமே தாங்கள் தினசரி செக்ஸ் உறவு வைத்துக் கொள்வதாகக் கூறியுள்ளனர். கிட்டத்தட்ட 20 சதவீதம் பேர் தாங்கள் செக்ஸ் உறவில் அவ்வளவு தீவிரமாக இல்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு அவர்கள் பல காரணங்களைக் கூறியுள்ளனர். அலுப்புத் தட்டியது, சோர்வு உள்ளிட்டவை அதில் சில காரணங்கள்.

26 சதவீதம் பேர் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை உறவு கொள்வதாகக் கூறினர். 16 சதவீதம் பேர் வாரத்திற்கு 3 அல்லது நான்கு முறை வைத்துக் கொள்வதாகக் கூறியுள்ளனர். அதேசமயம் 15 சதவீதம் பேர் மாதத்திற்கு ஒன்று அல்லது 2 முறை வைத்துக் கொள்வதாகக் கூறியுள்ளனர். ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை உறவு கொள்வோரும் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கை ஒரு சதவீதமாகும்.

7 சதவீதம் பேர் சில மாதங்களுக்கு ஒரு முறை தான் தாங்கள் உறவு கொள்வதாகக் கூறியுள்ளனர். இந்தக் கருத்துக் கணிப்பில் 1000 ஆண், பெண்கள் கலந்து கொண்டனர். இவர்களில் திருமணமாகாதவர்களிடம் நடத்திய ஒரு தனிக் கருத்துக் கணிப்பில் 5 சதவீதம் பேர் மட்டுமே தாங்கள் இதுவரை செக்ஸ் உறவு வைத்துக் கொண்டதில்லை என்று கூறியுள்ளனர்.



# அக்கம் பக்கம்

## என்ன கொடுமை சரணவா...

அந்த பிச்சைக்காரியை பார்க்கவே பரிதாபமாக இருந்தது. எண்ணெய் காணாத தலை, இடுங்கி ஒடுங்கிய கண்கள் என்று பார்த்தவர்களை பரிதாபப்படுத்தினாள். அவள் தோளில் சாய்ந்து கிடந்த குழந்தையோ இன்னும் பரிதாபம். சாப்பிட்டு ஒரு வாரமாவது ஆகியிருக்குமோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

நடைபாதையில் அவள் பிச்சைக்காக கையேந்திய போது அவளை பார்த்து ஒதுங்கிப் போனவர்கள் கூட, குழந்தையைப் பார்த்ததும் தங்கள் கையில் இருந்து சில்லறைக் காசுகளை தேடியெடுத்து பிச்சையிட்டார்கள். வெயில் ஏறத்தொடங்கியபோதும் அந்தப் பெண் ஒப்புக்குக் கூட ஒரு துணியை அந்தக் குழந்தை மீது மூடவில்லை. குழந்தை பளிச்சென்று பார்வையாளர்கள் கண்ணில் பட்டால் தான் பிச்சை நிச்சயம் என்பதை அவள் புரிந்து வைத்திருந்தாள். அதனால் குழந்தையை சுட்டெரிக்கும் வெயில் பற்றி அவள் கவலைப்படவில்லை. உச்சிவெயில் வந்த போது அவளைத் தேடி வாட்டசாட்டமான ரவுடி தோற்றத்தில் ஒருவன் வந்தான். அவனிடம் அந்தப் பெண் அதுவரை வசூலானதைக் கொடுத்தாள். இருவரும் அங்கிருந்த மர நிழலில் உட்கார்ந்தனர். அவன் கையோடு கொண்டு வந்திருந்த 2 பார்சலை இருவரும் ஆளுக்கொன்றாக பிரித்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

இதற்குள் பசி மயக்கமோ, சாப்பாட்டு வாசனையோ அந்தக் குழந்தையை விழிக்க வைத்தது. இதை எதிர்பார்த்தது போல் சாரத்தில் மடித்து வைத்திருந்த அந்த மதுப் போத்தலை எடுத்தான் அந்த முரட்டு ஆசாமி. போத்தலைத் திறந்தவன் கொஞ்சம் மதுவை கையில் ஊற்றி அதை அப்படியே அந்தக் குழந்தையின் முகத்தில் தெளித்தான். குழந்தை இதை எதிர்பார்க்கவில்லை என்பதை அதன் சுளித்த முகம் எடுத்துக் காட்ட முரட்டு ஆசாமி இப்போது கொஞ்சம் மதுவை குழந்தையின் வாயைத் திறந்து கட்டாயமாக ஊற்றினான். இதனால் மறுபடியும் குழந்தை மயக்க நிலைக்கு போனது. இதற்குள் சாப்பாட்டு பார்சலை காலி செய்த இருவரும் புறப்பட்டனர்.

அவன் அவளிடம் 'மறக்காமல் குழந்தை மறுபடியும் கண்முழிச்சா கொஞ்சம் ஒதுக்குப்புறமா போய் மதுவை அதன் வாயில் ஊத்திக்க. மறுபடி 2 மணிநேரத்துக்கு உனக்குப் பிரச்சினை இருக்காது' என்று சொல்லிவிட்டு புறப்பட்டான். இப்போது அந்தப் பெண் மறுபடியும் தனியாகக் குழந்தையுடன் பிச்சையெடுக்கத் தொடங்கினாள்.

குழந்தைகளை வைத்துக்கொண்டு இப்படி பிச்சையெடுக்கும் கும்பல் இப்போது அதிகரித்திருக்கிறது. பிச்சையெடுப்பவர்கள் இதற்காக 'நாள் வாடகை'க்கு குழந்தைகளை வாங்கிக் கொள்கிறார்கள். இதற்காக காலையில் தன் குழந்தையைக் கொடுக்கும் தாயிடம் இரவில் தான் குழந்தையை திருப்பிக் கொடுக்கிறார்கள். குழந்தையால் தினமும் ஒரு சராசரி வருமானம் வருவதை மட்டும் பார்க்கும் அந்த ஏழைத் தாய், தன் குழந்தை வேளாவேளைக்கு பசியாறுகிறதா? வாடகைக்கு வாங்கி போனவர்கள் குழந்தையை என்ன கதியில் வைத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவனிக்கத்தவறி விடுகிறாள். அந்த ஒரு நாளில் குழந்தையை பசி மயக்கத்திற்கும் மது மயக்கத்திற்கும் பயன்படுத்தி குழந்தையின் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கே உலை வைக்கிறார்கள் என்பதை உணர்வதில்லை.

**எஸ்.சேகர்**

## பணக்காரனாக சாகாதே; சீனாவின் கட்டுப்பாடு

கம்யூனிஸ நாடு என்றால் அங்கு பணக்காரன்,ஏழை வித்தியாசம் அவ்வளவாக இருக்காது என்பது பொதுவான சித்தாந்தம். ஆனால் சீனாவில் சமீப காலமாக தாங்கள் பணக்காரர்களாக வேண்டும் என்று மக்கள் சிந்திக்கிறார்கள் என்பது யதார்த்தம்.

நிறைய சம்பாதிக்கிறார்கள், சேமிக்கிறார்கள், பணக்காரர்கள் ஆகிறார்கள். பீஜிங்கில் உள்ள தேசியப் பல்கலைக் கழகம் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி சீனாவில் உயர்நிலைப் பணக்காரர்கள் மக்கள் தொகையில் பத்து சதவிகிதம் என்றால் அவர்களின் வருமானம் கீழ்நிலையில் உள்ள பத்து சதவிகித சீனர்களின் வருமானத்தை விட பன்னிரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.இது 1968 இல் 2007 இல் இருபத்து மூன்று மடங்கு அதிகமாக இருந்தது.

இப்படி இந்த ஏழை பணக்கார வருமான வித்தியாசம் சாதாரண மக்களின் மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அரசுக்குத் தெரிந்தே இருந்தாலும் நீ பணக்காரன் ஆகாதே என்று யாரையும் தடுக்க முடியவில்லை. சரி... பணக்காரனாக வாழ்ந்து விட்டுப்போ... ஆனால் பணக்காரனாக சாகாதே என்ற புதிய சித்தாந்தத்தைப் பரப்புகிறது அரசு.அதன் படி ஆடம்பரமாக கல்லறைகள் கட்டக்கூடாது.இடுகாட்டில் ஏராளமாக இடம்வாங்கிப் போடக் கூடாது.



அரசு விதித்திருக்கும் சில நிபந்தனைகள்.

கல்லறை கட்ட நாலடிக்கு நாலடி நிலம் தான் வாங்க வேண்டும்.கல்லறையின் உயரம் 39 அங்குலத்திற்கு மிகக் கூடாது யாராவது இதை மீறி அதிகமான இடத்தை வாங்கினால் அபராதம் எவ்வளவு தெரியுமா? அந்த இடத்தின் விலையைப்போல 300 மடங்கு! ஆடம்பரக் கல்லறைகளைக் கடந்து போகும் சராசரி மனிதனின் மன உணர்வுகள் பாதிக்கப்படும் என்பதால் இந்தப் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 'சமரசம் உலாவும் இடமே' பாடல் ஞாபகத்துக்கு வரவில்லை?

# உலகின் முதல் இலக்கியம்

புலவர் அ.சா.குருசாமி

தாய்மை உணர்வு வழங்கிய உலகின் முதல் இலக்கியமே 'எழுதா இலக்கியம்' என்று கூறப்படும் 'தாலாட்டு' இலக்கியமாகும்.

'தாயின் வயிற்றிலிருந்து அழுத குரலோடு குழந்தை உலகைப் பார்க்கும்போதே ஆராரோ' என்ற தாலாட்டு இசையும் பிறக்கிறது. இவ்வாறு மனித குலம் தோன்றிய காலம்தொட்டே தாலாட்டு தோன்றி வளர்ந்து வருகிறது. எனவே, எல்லா இலக்கியங்களுக்கும் முற்பட்டது என்ற சிறப்புடன் தனித்துவம் பெற்றுத் திகழ்கிறது 'தலாட்டு' இலக்கியம்.

தலாட்டு என்ற சொற்றொடர் தால்+ஆட்டு என்று பிரியும்.'தால்' என்றால் நாக்கு; குழந்தையின் அழுகை ஒலியை நிறுத்த, தாய் தன் இதழ்களைக் குவித்து நாவை ஆட்டி அசைப்பதால்தான் 'தாலாட்டு' எனப் பெயர் பெற்றது.

எல்லா மொழிகளிலும் அவரவர் தத்தம் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் சூழலுக்கு ஏற்ப தாய்மார்கள் தாலாட்டுப் பாடுகின்றனர்.

இசை இன்பத்தில்தான் குழந்தை தூங்குகிறது. என்றாலும் அதன் பிற்கால வளர்ச்சியில் நல்வழிப் பாதையில் பயணிக்கப் பயன்படும் வகையில் கருத்து வளமும் மூளையின் ஒரு பகுதியில் பதிவு செய்யப்படுகிறது என்று மன இயல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

தாய்க்குலம் உலகுக்கு அளித்துவரும் அழியாக் கருவூலம் தாலாட்டு. ஒரு தாய் தன் குழந்தையைத் தாலாட்டும்போது, அக்குழந்தை மெய்மறந்து தூங்குகிறது. அதைக் கேட்கும் மற்றவர்களது செவியும் மனமும் குளிர்கின்றன.

தாலாட்டு 'இலக்கியத்தின் தாய் ஊற்று' என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

குழந்தைப் பருவத்தையும் மொழி அறிவின் இளமைப் பொலிவையும் இலக்கியச் சிறப்பின் தாய்மைக் கனிவையும் தாலாட்டுப் பாடல்களில் காணமுடிகிறது.

இந்தக் கண்ணோட்டத்துடன் தாலாட்டு உள்ளிட்ட நாட்டுப்புறப் பாடல்களைக் கற்றறிந்த சான்றோர் உற்று நோக்கின், இன்றைய இலக்கியங்கள் பலவற்றுக்கும் வேர், மூலம் ஊற்று அடிப்படை தாலாட்டுதான் என்பதைப் புரிந்து கொள்வர்.

எழுதா இலக்கியமாக உலாவந்த தாலாட்டுப்பாடல்களை முதல் முதல் இலக்கியத்தில் பதிவு செய்தவர்கள் பன்னிரு ஆழ்வார்களே ஆவர், கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து, தங்களைத் தாய் நிலையில் வைத்து அவர்கள் பாடிய பாசுரங்கள் தாலாட்டு இலக்கியங்களாயின.

தாலாட்டு இலக்கியம் அரங்கேறிய காலம் கி.பி.6 ஆம் நூற்றாண்டு. பெரியாழ்வார்தான் முதன்முதலில் தாலாட்டுப் பாடியவர். எடுத்துக்காட்டுக்கு அவரது பாசுரம் ஒன்று

**'மாணிக்கம்கட்டி வயிரம் இடைக்கட்டி**
**ஆணிப்பொன்னால் செய்த வண்ணச்சிறு தொட்டில்**
**பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்**
**மாணிக்குறளனே, தாலேலோ**
**வையமளந்தானே தாலேலோ'**
**(நா.தி.பி.1 ஆம் பத்து 3 ஆம் திருமொழி தாலப்பருவம்)**

அதையடுத்து, 'பிள்ளைத்தமிழ்' என்ற சிற்றிலக்கிய வகை நூல்கள் தமிழ் இலக்கியத்துக்கு அணிசேர்த்தன. பிள்ளைத் தமிழில் வரும் பத்தப் பருவங்களுள் ஒன்று 'தாலப்பருவம்' அதனால் ஒவ்வொரு பிள்ளைத் தமிழ் நூலிலும் தாலாட்டு இடம் பெறலாயிற்று.

தற்காலத் தமிழ்க் கவிஞர்கள் பலர் தாய்மை வழங்கும் தாலாட்டின் இசை, நடை, மொழி




களையே அடிப்படையாகக்கொண்டு தனிப்பாடல்கள் புனைந்து வருகின்றனர். இவையே தாலாட்டின் இலக்கிய வளர்ச்சியாகும்.

காலங்காலமாக செவி வழியாகத் தொடர்ந்து வந்த தண்டமிழ் நாட்டுத் தாலாட்டுப் பாடல்களைக் கண்டறிந்து, அவை நூல்களாகத் தொகுக்கப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கின்றன.

குழந்தை பிறந்தவுடன் மங்கலச் சடங்கு, தொட்டிலிடுதல், பெயர் சூட்டல், காதுகுத்தல், ஆண்டு நிறைவு, பள்ளியில் சேர்த்தல் ஆகிய சடங்குகள் தமிழர் நாகரிகத்துக்கு உரியதாக ஒளிர்கின்றன. இந்நிகழ்வுகள் பற்றிய சிறப்புகள் யாவும் தாலாட்டுப் பாடல்களில் மிளிர்வதைக் காணலாம்.


தாலாட்டு தாய்மைக்குரிய இலக்கியமாகையால், அதில் தாய்மாமன்மார் பெருமைகளும் அவர்களின் சீர்வரிசை மேன்மைகளும் முன்னோர்கள் தம் சாகசங்களும் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வள்ளியம்மை தாலாட்டு, சங்ககாலக் காதல் முறைமையும் சொக்கர் மீனான் தாலாட்டு உழவுத் தொழிலின் உயர்வையும் பாண்டிய நாட்டுத் தாலாட்டு தமிழகத்தின் செல்வச் செழிப்பையும் நாகரிகத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

தமிழகம் முழுவதும் ஊருக்கு ஊர் வழங்கிவரும் தாலாட்டுப் பாடல்கள், நமது மண்ணின் மாண்பு, பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை நெறி போன்றவற்றை எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவைகளை ஒருங்கிணைத்துப் பாதுகாக்க வேண்டியது தமிழர்தம் தலையாய கடமையாகும்.

# அரண்மனைக் கப்பல்

உலகின் மிகவும் விலையுயர்ந்த அரண்மனை போன்று தோற்றமளிக்கும் கப்பலொன்று தயாராகி வருகிறது. இந்தக் கப்பலின் விலை 15 ஆயிரம் கோடி ரூபா. பிரிட்டன் நாட்டில் துறைமுகம் ஒன்றில் கட்டப்பட்டு வரும் இந்தக் கப்பல் மொனாக்கோ நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவருக்காகத் தயாராகி வருகிறது. அவர் பெயரை வெளியிட இந்தக் கப்பல் கட்டுமான நிறுவனம் மறுத்துவிட்டது. 500 அடி நீளமுள்ள இந்தக் கப்பலுக்கு ஸ்டீரீட்ஸ் ஒப் மொனாக்கோ எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் ஹோட்டல்கள், நீச்சல்குளம், சூதாட்ட விடுதி, கார் ரேசுக்கான தனிப்பாதை, டெனிஸ் மைதானம் ஆகியவை உள்ளன. அரண்மனை போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கப்பலை இயக்குவதற்கு 70 ஊழியர்கள் தேவை. கப்பலை இயக்குவதற்கு மட்டும் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபா செலவு செய்ய வேண்டியிருக்கும்.






# குறுக்கெழுத்துப்போட்டி - 86

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | | 16 |
| 17 | | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**இடமிருந்து வலம்**

1. குறிக்கோள்

7.விற்பனை நிலையம் (திரும்பியுள்ளது)

9. வடமராட்சியிலுள்ள ஒரு கிராமம் (திரும்பியுள்ளது)

12. நிழல் / எதிரொளி என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது)

18. மானைப்போல் வேகமாக நடப்பதை இப்படிச் சொல்லலாம் (குழம்பியுள்ளது)

22. நீரின் மறுபெயர், பீதாம்பரம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது)

26. கரைத்தல், மனதைக் குழப்புதல் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஒரு செயலில் இருந்து பின்வாங்குதல்

2. பாத்திரம் (குழம்பியுள்ளது)

4. நன்கொடை, அன்பளிப்பு (குழம்பியுள்ளது)

5. தாளப் பிரமாண வகை

6. கவிதை இயற்றும் திறன் (குழம்பியுள்ளது)

14. அன்பு, தகுதி என்றும் பொருள்படும்

23. குச்சி, கம்பு (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப்போட்டி - 84 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கதிர்காமம் | 1. கறிவேப்பிலை |
| 7. அறிவாளி | 2. அதிபதி |
| 12. வேதாதி | 3. வார்த்தாகம் |
| 15. அலை | 4. காளி |
| 17. கப்பல் | 6. அனிச்சம் |
| 23. அத்தினி | 20. அனல் |
| 27. கலைஞானம் | 25. கதி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எப்.எம்.ரிம்ஸாத்,**
**இல. 115, அண்ணல் வீதி,**
**மாஞ்சோலை, கிண்ணியா.**

## பாராட்டுப் பெறுவோர்

01. மலர்விழி ஜேசுதாசன்,
இல. 155/7, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு-13.

02. எம்.எப்.அம்ரா,
வைத்தியா வீதி,
தெஹிவளை.

03. கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

04. எம்.விஜயலக்ஷ்மி,
தலவாக்கலை.

05. ம.ஆக்ஷ்மிகா,
இராஜசிங்க வீதி,
கொழும்பு-6.


*உங்கள் விடைகளை*
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
*என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...*

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................

# செங்கற்களில் கார்



இங்கு பார்க்கும், பி.எம்.டபிள்யூ. கார் வித்தியாசமாக இருக்கிறதா? உண்மைதான். இது ஒரு வித்தியாசமான கார்தான். இந்தக் கார் முழுவதும் செங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

சீனாவைச் சேர்ந்த பிரபல கலைஞர் டைஜெங். இவருக்கு ஏதாவது புதுமையாக படைக்க வேண்டும் என ஆசை வந்தது. மிகவும் சொகுசான, விலை உயர்ந்த, பி.எம்.டபிள்யூ கார் போன்று ஒரு காரை கற்களால் உருவாக்க வேண்டும் என ஆசைப்பட்டார். தன் கலை சிற்பத்தை உருவாக்க செங்கற்களே போதும் என முடிவுக்கு வந்தார்.

கடந்த, 2010இல் இவர் இதற்காக செங்கற்களை சேகரிக்கத் தொடங்கினார். பின், காரை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். ஒரு ஆண்டு முயற்சிக்குப் பின் சமீபத்தில் இந்த கார் முழுமை அடைந்துள்ளது. இந்த காரில், கண்ணாடியைத் தவிர, மற்ற அனைத்துமே செங்கற்கள் தான். காரின் கதவை திறக்க பயன்படுத்தப்படும் இணைப்பு கூட, கற்களால் ஆனதுதான் . கார்க் கதவு, ஸ்டியரிங் வீல், புகை போக்கி என எல்லாமே செங்கலால் அமைக்கப்பட்டுள்ளன.

சீனாவின் தென் கிழக்கு பகுதியில் குவாங்டாங் மாகாணத்தில், ஷென்செங் என்ற நகரில் இந்த கார் இப்போது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காரை உருவாக்க டைஜெங்கிற்கு, 60 லட்சம் ரூபா செலவாகியுள்ளது. சீனாவில் பல நகரங்களில் காட்சிக்கு வைக்கப்பட உள்ள இந்தக் காரை சீனாவில் புதிதாக உருவாகி வரும் கோடீஸ்வரர்கள் தங்கள் வீட்டின் முன் பூங்காவில் அழகுக்காக வைக்க வாங்குவர் என்கின்றார் டைஜெங்.

சில ஆண்டுகளுக்கு முன் வரை கூட வெறும் சைக்கிள் மட்டுமே வைத்திருந்த சீனர்கள், இப்போது எல்லா வித சொகுசுக் கார்களையும் வாங்கி குவிக்க ஆரம்பித்துள்ளனர். உலகில் பிரபலமாக உள்ள எல்லா வித சொகுசுக் கார்களும், சீனாவில் இப்போது விற்பனையில் கொடிகட்டி பறக்கிறது. எனவே, இந்த ஓடாத செங்கல் காரையும், சீனர்கள் விட்டு வைக்க மாட்டார்கள்.

# மரண தூதனாகும் செல்போன்



கையில் செல்போனை பிடித்தபடி கார்,மோட்டார் சைக்கிள்,வான் செலுத்துவதாக நினைத்து தங்களது வாழ்க்கையை நொடியில் தொலைக்கும் சம்பவங்கள் அடிக்கடி அரங்கேறுகின்றன.மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதைவிட செல்போன் பேசியபடி வந்து விபத்தில் சிக்கியவர்களின் எண்ணிக்கை தற்போது தாறுமாறாக உயர்ந்து வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு நாளும் நான்கில் ஒரு வீதி விபத்து செல்போன் பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுவதால் நடப்பதாகவும் இதனால் எதிரே வரும் வாகனச் சாரதிகளும் அவர்களது குடும்பங்களின் எதிர்காலமும் பாதிக்கப்படுவதாகவும் அந்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.செல்போன் பேசிக்கொண்டே வாகனங்கள் செலுத்தாதீர்கள் என்று அரசாங்கமும் பொலிஸாரும் பல இடங்களில் எச்சரிக்கைப் பலகை வைத்திருந்தும் அதை யாரும் பொருட்படுத்துவதில்லை.

வாகனம் செலுத்தும்போது செல்போன் பயன்பாட்டை குறைப்பதற்கான சில எளிய வழிகள்;

கார் அல்லது மோட்டார் சைக்கிளில் புறப்படுவதற்கு முன் செல்போனில் வந்துள்ள அழைப்புகள் மற்றும் எஸ்.எம்.எஸ்.ஆகியவற்றை ஒரு முறை பார்த்து விட்டு கிளம்புவது நல்லது.முக்கியமானவர்களிடம் அவசியம் பேச வேண்டியிருந்தால் பேசிவிட்டு அதன்பிறகு புறப்படுங்கள்.

காரை செலுத்திக் கொண்டே எஸ்.எம்.எஸ்.எழுதி அனுப்புவதை பலர் குலத்தொழிலாக கொண்டுள்ளனர்.இதை முற்றிலும் தவிர்ப்பது உங்களுக்கு மட்டுமல்ல எதிரில் வருபவருக்கும் நல்லது.

வாகனஞ் செலுத்தும்போது அழைப்புகள் வந்தால் செய்தியை தெரிந்து கொண்டு சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.எதிர்முனையில் பேசுபவரிடம் வாகனம் செலுத்துவதை தெரிவித்து விடுங்கள்.இதனால் அவர் உங்களை தவறாக நினைத்துக் கொள்வதை தவிர்க்கலாம்.

மோசமான வானிலையின்போது வாகனம் செலுத்துவதனால் கட்டாயம் செல்போன் பேசுவதை தவிர்ப்பது புத்திசாலித்தனம்.இதுபோன்ற சூழ்நிலைகளில் கவனம் சிதறினால் நொடியில் மரணம் ஏற்படுவதை யாராலும் தவிர்க்க முடியாது.

அலுவலகம் மற்றும் வீட்டில் இருப்பவர்களின் நம்பர்களை ஒன் டச் டயல் ஒப்சனில் பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்.வாகனம் செலுத்தும்போது அவசரமாக பேசும் சூழ்நிலை இருந்தால் உதவிகரமாக இருக்கும்.

வாகனம் செலுத்தும்போது செல்போனை எளிதாக எடுக்கும் வகையில் டேஷ் போர்டில் கண்ணுக்கு எதிரில் படும்படியாகவோ அல்லது பொக்கெட்டிலோ வைத்துக் கொள்ளுங்கள்.

வொய்ஸ்-மெயில் மோடில் செல்போன் இருந்தால் அனைத்து அழைப்புகளையும் நீங்கள் எளிதாகத் தெரிந்து கொள்ள முடியும்.

வாகனம் செலுத்தும்போது அவசியம் பேசும் சூழ்நிலை ஏற்பட்டால் வீதியின் ஓரத்தில் பாதுகாப்பாக வாகனத்தை நிறுத்திவிட்டு பேச முற்படுங்கள்.இயலாத நேரத்தில் ஹான்-ப்ரீ மற்றும் ஹெட்போன் ஆகியவற்றை பயன்படுத்தி சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

அழைப்பு ஏதும் வந்தால் நடுரோட்டில் வாகனத்தை நிறுத்திக்கொண்டு வழ வழ என்று பேசிக்கொண்டு நிற்காதீர்.

விபத்துகளும் மரணங்களும் எதிர்பாராமல் நடப்பதை ஒத்துக்கொள்ளும் அதேநேரத்தில் அதற்கு முக்கிய காரணம் நாமாகிவிடக்கூடாது என்பதை அனைவரும் முதலில் உணர வேண்டும்.மேலும் வாகனம் செலுத்தும்போது செல்போன் பேசுவதற்கு சில வழிமுறைகள் இருந்தாலும் அவை தவிர்க்க முடியாத சூழ்நிலைகளுக்குத்தான்.வாகனம் செலுத்தும்போது செல்போன் பேசுவதை முற்றிலும் தவிர்ப்பதே புத்திசாலித்தனம்.




# பஞ்சாப் பெண்களின் பரிதாபம்

பஞ்சாப்பில் புதிதாகத் திருமணமான பெண்கள் மொபைல் போன்களில் பேசுவதால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படுவதாகவும் சில நேரங்களில் இந்தப் பிரச்சினை விவாகரத்து வரை சென்று விடுவதாகவும் மாநில மகளிர் ஆணையம் திடுக்கிடும் தகவலை தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மாநில பெண்கள் ஆணையத்தின் தலைவர் குர்தேவ் கவுர் சங்கா இது குறித்து கூறியதாவது;

கடந்த சில ஆண்டுகளாக பஞ்சாப் பெண்கள் ஒரு விசித்திரமான பிரச்சினையை எதிர் நோக்கி வருகின்றனர். குறிப்பாக கிராமப்புறங்களில் வசிக்கும் புதிதாகத் திருமணமான பெண்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகம் உள்ளது. புதிதாகத் திருமணமான பெண்கள் மொபைல் போன்களைப் பயன்படுத்துவது அவர்களின் கணவர் குடும்பத்தாருக்கு பல்வேறு சந்தேகங்களை கிளப்பி விடுகிறது. குறிப்பாக கணவரின் தாயார்,சகோதரர்,சகோதரிகள் புதிதாக தங்கள் வீட்டுக்கு வந்த பெண், தொடர்ந்து மொபைல் போனில் பேசிக் கொண்டிருப்பதை சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். தங்களுக்கு அறிமுகமில்லாத எந்த ஆணுடனாவது தங்களது மருமகள் பேசிக் கொண்டிருந்தால் அதை வேறு மாதிரியாகச் சிந்திக்கின்றனர்.

பழைய ஆண் நண்பர்களுடன் அவர்கள் பேசுவதாகவும் திருமணமான பின்பும் அவர்கள் திருந்தாமல் தங்கள் பழைய ஆண் நண்பர்களுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் சந்தேகப்படுகின்றனர். கணவரின் தாயார்களின் அணுகுமுறையோ வேறு மாதிரியாகவுள்ளது. எந்த வேலையும் செய்யாமல் எப்போது பார்த்தாலும் மொபைல் போனில் தங்கள் மருமகள் பேசிக் கொண்டிருப்பதாக இவர்கள் புகார் கூறுகின்றனர்.

சில நேரங்களில் இந்தப் பிரச்சினை விவாகரத்து வரை சென்று விடுகிறது. அந்தப் பெண்களின் கணவர்களை எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் அவர்கள் சமாதானமடைய மறுக்கின்றனர். ஆண்டுக்கு சராசரியாக 1,400 வழக்குகள். இதுபோல் எங்களுக்கு வருகின்றன.புகார் தெரிவிப்போருக்கும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் ஆலோசனை கூறி அனுப்பி வைக்கிறோம். சில நேரங்களில் எங்கள் ஆலோசனைகள் எடுபடுவது இல்லை.

கடந்த சில ஆண்டுகளாகத்தான் இந்தப் பிரச்சினையேற்படுகிறது. மொபைல் போன் பயன்பாடு மிகவும் குறைவாகவிருந்த காலத்திலோ, அதற்கு முன்போ இதுபோன்ற மணமுறிவுகள் எதுவும் ஏற்பட்டது இல்லை. மிகப் பெரிய பிரச்சினைகளுக்காக மட்டுமே விவாகரத்துக் கோருவர். தற்போது மொபைல் போனில் பேசும் ஒரே காரணத்துக்காகவே பலர் விவாகரத்துக் கோருகின்றனர்.எங்களைப் பொறுத்தவரை புதிதாகத் திருமணமான பெண்களுக்கு சில ஆலோசனைகளைக் கூறி வருகிறோம். கூடிய வரை திருமணமானதற்குப் பின் இரண்டு ஆண்டுகளுக்காவது மொபைல் போனைப் பயன்படுத்த வேண்டாம் என்பதுதான் எங்களின் முக்கிய ஆலோசனை.


# மங்காத்தாவில் விஜய்



கோலிவூட்டின் இப்போதைய லேட்டஸ்ட் பரபரப்பு விஜய் ,அஜித் பற்றிய செய்தி தான். அஜித் நடிப்பில் உருவாகி வரும் அவரது 50 ஆவது படமான மங்காத்தாவில் கௌரவ வேடத்தில் இளைய தளபதி விஜய்யும் நடித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. பொதுவாக எல்லாத் தொழிலிலும் போட்டி இருக்கிறது. அதுபோல சினிமாவிலும் போட்டி உண்டு. அதில் அஜித்துக்கும் , விஜய்க்கும் சொல்லவே தேவையில்லை. முன்பெல்லாம் இவர்களது படத்தில் அஜித்தை தாக்கி விஜய் பஞ்ச் வசனம் பேசுவது போன்றும் விஜய்யை தாக்கி அஜித் பஞ்ச் வசனம் பேசுவதும் தொடர் கதையாக இருந்தது. இது இவர்களது ரசிகர்கள் மத்தியிலும் தொடர்ந்தது இருவரது ரசிகர்களும் எப்போதும் முறைத்துக் கொண்டே இருப்பார்கள். ஆனால் நிஜத்தில் விஜய்யும் அஜித்தும் நல்ல நண்பர்கள். இவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு படம் நடிக்க மாட்டார்களா? என இவர்களது ரசிகர்களுக்கு ஒரு ஏக்கம் இருந்து கொண்டே இருந்தது. இப்போது அந்த ஏக்கம் பூர்த்தியாகி இருக்கிறது. வெங்கட்பிரபு இயக்கத்தில் அஜித் நடித்து வரும் 50 ஆவது படமான மங்காத்தா படத்தின், நாயகி த்ரிஷா தவிர அர்ஜூன், லட்சுமிராய், அஞ்சலி, வைபவ்.பிரேம்ஜிஅமரன் என்று ஒரு பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்து வருகிறது. இந்நிலையில் மங்காத்தாவில் ஒரு காட்சியில், கௌரவ வேடத்தில் இளைய தளபதி விஜய்யும் நடித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே விஜய் மற்றநடிகர்கள் படங்களில் கௌரவ வேடத்தில் வந்துபோயுள்ளார். ஆனால் அது எல்லாம் பெரிய விஷயமல்ல. அஜித் படத்தில் ,விஜய் நடித்திருப்பதாக கூறுவது தான் பெரிய விடயம். இந்த செய்தி குறித்த உறுதியான தகவல் இல்லை.ஒரு வேளை இந்த செய்தி உண்மையாக இருப்பின் நிச்சயமாக இருவரது ரசிகர்களுக்கும் இது கொண்டாட்டமான செய்திதான் . தற்போது மங்காத்தா படத்தின் இறுதிக் கட்ட படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடைபெற்று வருகிறது. இன்னும் ஓரிரு நாளில் படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஜூலை இரண்டாவது வாரத்தில் மங்காத்தா படம் திரைக்கு வருகிறது.



## Saturday சினிமா




இன்னும் சில தினங்களில் வெளிவரப்போகிறது கரணின் கந்தா திரைப்படம். பாபு கே. விஸ்வநாத் இயக்கியிருக்கும் இப்படத்தின் விளம்பரங்களில் கரணும் விவேக்கும் மட்டுமே முழுசாக இடம் பிடித்திருக்கிறார்கள். படத்தின் நாயகி மித்ராவை காணவேயில்லை. படத்தில் விவேக்கின் குசும்பு இந்த வருடம் முழுக்க பேசப்படுகின்ற மாதிரி இருக்குமாம். அது மட்டுமல்ல முதன் முறையாக வடிவேலுவையும் சீண்டியிருக்கிறாராம். எப்படி? வைகை புயலுக்கும் நகைச்சுவை சிங்கத்துக்கும் நடுவே எழுந்த ரியல் எஸ்டேட் ரகளையை பார்த்து நாடே கைகொட்டி சிரித்ததல்லவா? அந்த ஊழல் எப்படி நடந்தது. யார் மீது தவறு இருக்கிறது என்பதை மிகவும் நகைச்சுவையாக சொல்லியிருக்கிறாராம் விவேக். படத்தில் இவர் வடிவேலு என்றால் சிங்கமுத்து வேடத்தை ஏற்றிருப்பவர் செல் முருகன். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. தீர்ப்பு யார் பக்கம் வரும் என்றே தெரியாது. இந்த நேரத்தில் விவேக்கின் தைரியத்தை யார் யாரையெல்லாம் புரட்டியெடுக்குமோ என்று பலரும் கவலைப்படத் தொடங்கியுள்ளனர்.

## கமல் ஜோடி ஸ்ரேயா

விஸ்வரூபம் படத்தில் கமலின் புதிய ஜோடி ஸ்ரேயா என செய்திகள் வெளியாகியுள்ளன. ரஜினியின் ஜோடியாக சிவாஜியில் நடித்ததன் மூலம் முதல் இடத்துக்குப் போனவர் ஸ்ரேயா. அதன் பிறகு கமல் ஜோடியாக அவர் நடிக்கப் போவதாகக் கூறப்பட்டது. அந்தப் படம் மர்மயோகி. ஆனால் அந்தப் படம் டிராப் ஆகிவிட்டது. இப்போது அவர் கமல் எழுதி இயக்கும் விஸ்வரூபம் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிப்பார் என்று கூறப்படுகிறது. இந்தப் படத்தில் முதல் நாயகியாக மும்பையைச் சேர்ந்த சோனாக்ஷி சின்ஹா நடிக்கிறார். இரண்டாம் நாயகி வேடம்தான் ஸ்ரேயாவுக்கு என்றாலும், கமலுடன் டூயட் பாடவிருப்பவர் ஸ்ரேயாதான் என்கிறார்கள். முதல் நாயகி, இரண்டாவது நாயகி என்ற பேதமெல்லாம் பார்க்காமல் கிடைத்த வேடத்தை ஒப்புக் கொள்ள ஸ்ரேயா தயாராகி விட்டார்.






கார்த்தி நடித்துவரும் சகுனி படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக ஸ்ரேயா தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்ற தகவலை ஸ்ரேயா மறுத்துள்ளார். அறிமுக இயக்குனரின் இயக்கத்தில் கார்த்தி நடித்து வரும் சகுனி ஒரு அரசியல் படம். அரசியல் நையாண்டியே இதன் மையம் . இந்தப் படத்தில் அவருக்கு இரண்டு ஜோடிகள் எனவும் ஒருவர் ஸ்ரேயா எனவும் தகவல் வெளியானது. இதனை ஸ்ரேயா மறுத்துள்ளார். கார்த்தி படத்தில் நடிப்பதற்காக என்னை இதுவரை யாரும் தொடர்பு கொள்ளவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் நடிக்கமாட்டேன் - மீனா




என்னுடைய செல்லக் குழந்தையுடன் நேரத்தை செலவிடவே எனக்கு சரியாக இருக்கிறது. அவளைப் பார்த்துக் கொள்வது மட்டும்தான் இனி என்னுடைய வேலை.


எனவே மறுபடியும் நான் நடிக்கப் போவதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லையென்று கூறியுள்ளார் மீனா. கண்ணழகியாக, தமிழ்த் திரையுலகை கலக்கி வந்த மீனாவுக்கும், பெங்களூரைச் சேர்ந்த வித்தியாசாகர் என்ற பொறியியலாளருக்கும் கடந்த 2009 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. அதன் பின்னர் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. குட்டிப் பாப்பாவுக்கு நைனிகா என்று பெயர் சூட்டியுள்ளனர். இந்த நிலையில், மீனா மீண்டும் நடிக்கப் போவதாகவும், சிரஞ்சீவியின் மகன் ராம் சரண் தேஜாவுக்கு மாமியார் வேடத்தில் அவர் தெலுங்கில் நடிக்கவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இதனால் மீனா அதிர்ச்சி அடைந்துள்ளார். இந்த செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியாக உள்ளது. எனக்கு நடிக்கும் எண்ணமே இல்லை. இப்போது நான் நிம்மதியாக, சந்தோஷமாக குடும்பம் நடத்தி வருகிறேன். எனது மகள் நைனிகாவை பார்த்துக் கொள்ளவே எனக்கு நேரம் போதவில்லை. எனவே மீண்டும் நடிக்கும் எண்ணம் என்னிடம் இல்லை என்றார் மீனா.

## விரைவில் பில்லா-2

மங்காத்தா படத்தை முடித்துவிட்டு தனது அடுத்த படமான பில்லா இரண்டாம் பாகத்தில் கவனம் செலுத்தவுள்ளார் அஜித். வெங்கட்பிரபு இயக்கத்தில் அஜித் நடித்திருக்கும் மங்காத்தா படப்பிடிப்பு ஏறக்குறைய முடிந்துவிட்டது. இதில் ஹொலிவுட் நடிகர் ஜோர்ஜ் குளூனியின் வேடத்தில் அஜித் நடித்துள்ளார். இந்த வேடத்தை அஜித்துக்கு பரிந்துரைத்தவர் வெங்கட்பிரபு. அஜித்தின் அடுத்த படம் பில்லா இரண்டாம் பாகம் . இதில் சாதாரண இளைஞன் எப்படி பில்லாவாக மாறினான் என்பதை காண்பிக்க இருக்கிறார்கள். அதாவது பில்லா அஜித்தின் இளமைக்காலம் தான் இந்த பில்லா இரண்டாம் பாகம். முதல் பாகத்தைவிட இளமையாகத் தெரிய வேண்டும் என்பதற்காக உடல் எடையை குறைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் அஜித். அடுத்த மாதம் 20 ஆம் திகதி படப்பிடிப்பு தொடங்கும் என தெரிகிறது.



விக்ரமின் புதிய படத்துக்கு ராஜ பாட்டை என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.தெய்வத்திருமகள் படத்துக்குப் பிறகு சுசீந்திரன் இயக்கும் படத்தில் விக்ரம் நடிக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.தெலுங்கு நடிகை தீக்ஷிதா சேத் நாயகியாக நடிப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.இந்தப் படத்துக்கு வேந்தன் என்று பெயர் வைத்திருப்பதாக செய்திகள் வெளியிட்டனர்.இதனை சுசீந்திரன் மறுத்தார்.படத்தின் பெயர் வேந்தன் அல்ல.நல்ல பெயராக தேடிக் கொண்டிருக்கின்றோம் என்றார். இப்போது ராஜபாட்டை என்ற பெயரை தேர்வு செய்துள்ளனர்.விக்ரம் பூபதி பாண்டியன் இயக்கத்தில் ராஜாவேஷம் என்ற படத்தில் நடிப்பதாக இருந்து பிறகு அந்தப் படம் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.



காட்டுப்புலி - அர்ஜுன்

தெலுங்கில் அர்ஜுன் நடித்த அனுமான் ஜங்ஷன் என்ற படம் தமிழில் சிங்கக் கோட்டை என்ற பெயரில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது.இதில் அர்ஜுன் ஜோடியாக சினேகா நடித்துள்ளார்.சிங்கக் கோட்டைக்குப் பின்னால் நீண்ட பிளாஷ்பேக் உள்ளது.மலையாளத்தில் சுரேஷ்கோபி,லால்,திலீப்,காவ்யா மாதவன்,சம்யுக்த வர்மா நடித்த படம் தென்காசிப்பட்டணம்.இந்தப் படம் இதே பெயரில் சரத்குமார்,நெப்போலியன்,விவேக்,தேவயானி நடிப்பில் தமிழில் ரீமேக் செய்யப்பட்டது. அதேபோல் தெலுங்கில் அனுமான் ஜங்ஷன் என்ற பெயரில் அர்ஜுன்,ஜெகபதிபாபு,சினேகா நடிப்பில் ரீமேக் செய்யப்பட்டது.இந்தப் படத்தைத்தான் இப்போது சிங்கக்கோட்டையாக்கியிருக்கிறார்கள்.



அனுஷ்கா



# பணத்தை மதிக்காத இளசுகள்

ஐந்து வருடங்களுக்கு முன்பு, அப்பா, ஸ்கூல்ல ஃபிரண்ட்ஸ் கிண்டல் அடிக்கறாங்க எல்லா சட்டையும் பழசா இருக்கு புதுசா ஒண்ணு வாங்கித்தாப்பா என்று மகன் கேட்டால் அவ்வளவுதான் என்ன விளையாடறியா? ஆறு மாதத்துக்கு முன்னாடிதான் ஒரு செட் வாங்கிக் கொடுத்தேன்? பணத்தோட அருமையே உனக்கு தெரியலை எல்லாம் தீபாவளிக்கு வாங்கிக்கலாம் போ என விரட்டியடிப்பார் ஆனால் இப்போது?

டாட் ஃபிரண்ட்ஸோட அவுட்டிங் போறேன் செலவுக்கு பணம் வேணும் என் கார்டுல ஒரு அஞ்சாயிரம் ரூபா டெபாசிட் பண்ணிடறியா? ‘ஓயெஸ், மை சைல்ட் எதுக்கும் பத்தாயிரமா டெபாசிட் பண்ணிடறேன்’ இது தான் முதல் தலைமுறைக் குடும்பத்துக்கும் மூன்றாம் தலைமுறைக் குடும்பத்துக்கும் உள்ள தலைமுன்ற இடைவெளி. பணத்துக்கு கவலையே இல்லை. செலவழிப்பதற்கும் காரணம் அவசியமில்லை. வருது செலவழிக்கணும் சந்தோஷமாக இருக்கணும் இதுதான் அவர்களின் வாழ்க்கை தத்துவம்.

பாஸ்ட்புட், கிரெடிட் கார்டு, நைட் பார்ட்டி போன்ற பழக்கம் எல்லாம் இன்றைய தலைமுறையினரில்தான் ஆரம்பித்தது என்று எண்ண வேண்டாம். இதைத் தொடங்கியது நடுத்தர மேல் வருவாய் பிரிவு அப்பாக்களும் அம்மாக்களும்தான். குறிப்பாக இளம் பெண்களிடம்தான் கார்ட் கலாசாரம் அதிக அளவில் உள்ளது. ஆண்களில் இன்னும் பலரும் மிஸ்கோல் கலாசாரத்தில்தான் உள்ளனர். ஆண்களை விட பெண்கள் ஓசைப்படாமல் அதிகம் சம்பாதிக்க ஆரம்பித்ததும் இதற்கு முக்கிய காரணம்.

**பிட்சா முதல் பார்லர் வரை**

பிட்சாவில் இருந்து பியூட்டி பார்லர் வரை இப்போது எங்கும் கிரெடிட், டெபிட் கார்ட்டு மூலம் பணம் செலுத்துவது அதிகரித்து விட்டது. நேரில் சென்று க்யூவில் நின்று முன்பதிவு செய்வதை விட, இது சுலபமாக இருப்பதால் இளையோர் கூட்டம் ஒன்லைனிலேயே பழியாக கிடக்கிறது. விளைவு பத்து பைசாவில் முடியக்கூடிய செலவை, பத்து ரூபாய்க்கு செய்வது இளசுகளின் பழக்கமாகி விட்டது. இதை அறியாமை என்று சொல்வதைவிட, பணத்தின் மீதான அலட்சியம் என்று சொல்லலாம். மீறி அறிவுரை சொன்னால் சம்பாதிப்பது எதற்கு, செலவழிப்பதற்கு தானே? என்ற பதில், அட்வைஸை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டது.

கார் வைத்திருப்போர் எண்ணிக்கை இப்போது பல மடங்கு பெருகி விட்டது. அதிலும் கிரெடிட்கார்ட் வைத்திருப்பவர்கள் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை இலட்சத்தை தொட்டு விட்டது.

தாங்கள் சம்பாதித்த பணத்தைத்தான் செலவழிக்க வேண்டும் என்று திடமாக உள்ளனர். எப்படி இட்லி, வடை, கெட்டி, சட்னி இப்போது பிட்சா ஆனதோ, அதுபோல, கரன்சி இப்போது கார்ட் கலாசாரமாகிவிட்டது.

உலகில் மிகவும் அமைதியான நாடாக ஐஸ்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை ஊழலில்தான் இந்தியா படுவேகமாக மற்ற நாடுகளை பின்னுக்கு தள்ளிவிட்டு பாய்ச்சல் காட்டுகின்றது என்றால், தற்போது உலகின் மிக அமைதி குறைவான, அதாவது ஆபத்தான 20 நாடுகளின் பட்டியலிலும் இந்தியா இடம் பிடித்துள்ளதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

சர்வதேச ஆய்வு அமைப்பான பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் உலக அளவில், உலகின் அமைதியான நாடுகள் குறித்த ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்த ஆய்வுக்கு மொத்தம் 153 நாடுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

வன்முறை தாக்குதல், மோதல்களினால் ஏற்படும் மரணம், உள்நாட்டு மொத்த உற்பத்தியில் இராணுவத்திற்கு செலவிடப்படும் அளவு ஆகியவை இந்த ஆய்வுக்கு பரிசீலிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

# உலகில் மிகவும் அமைதியான நாடு



இதில் உலகின் அமைதியான நாடாக ஐஸ்லாந்து முதலிடத்தை பிடித்துள்ளது. இரண்டாவது இடம் நியூசிலாந்துக்கும், மூன்றாவது இடம் ஜப்பானுக்கும், நான்காவது இடம் டென்மார்க்கிற்கும், ஐந்தாவது இடம் செக் குடியரசுக்கும் கிடைத்துள்ளது.

மேலும் ஆறாவது இடம் ஒஸ்திரியாவிற்கும், ஏழாவது இடம் பின்லாந்துக்கும், எட்டாவது இடம் கனடாவுக்கும், ஒன்பாதாவது இடம் நோர்வேக்கும், பத்தாவது இடம் ஸ்லோவேனியாவுக்கும் கிடைத்துள்ளன. அதே சமயம் உலக நாடுகளில் மிக அமைதி குறைவான நாடுகளின் பட்டியலில் நாடாக சோமாலியா கடைசி இடத்தில் உள்ளது.

ஆட்சி நிர்வாகமே இல்லாத சோமாலியா கடைசி இடத்தை பிடித்ததில் வியப்பேதும் இல்லை என்றாலும், உலக நாடுகளில் மிக அமைதி குறைவான, அதாவது ஆபத்தான 20 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது இந்தியர்களுக்கு கவலை அளிப்பதாக உள்ளது.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்தமுள்ள 153 இடங்களில் இந்தியாவுக்கு 135 ஆவது இடமும், பாகிஸ்தானுக்கு 146 ஆவது இடமும் ஆப்கானிஸ்தானுக்கு 150 ஆவது இடமும் கிடைத்துள்ளது.

அதே சமயம் 2008 இல் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார சரிவின் தாக்கத்தினால் ஐஸ்லாந்தின் வங்கிகள் பெருமளவு அழிவை சந்தித்ததோடு, ஐஸ்லாந்து முதல் முறையாக தனது நாட்டின் சில இடங்களில் கலவரத்தையும் கண்டது.

ஆனால் மூன்றே ஆண்டுகளில் மீண்டும் தன்னை கட்டமைத்துக் கொண்டு, உலகின் மிக அமைதியான நாடுகள் பட்டியலில், அதாவது உலகிலேயே நிம்மதியாக வாழக்கூடிய நாடுகளில் முதலிடத்தை பிடித்து உலக நாடுகளை அண்ணாந்து பார்க்க வைத்துள்ளதோடு, இதுவரை அந்த இடத்தில் இருந்த நியூசிலாந்தையும் இரண்டாமிடத்திற்கு தள்ளி உள்ளது.

சீனாவில் தொடர்ந்து காணப்படும் சமூக குழப்பம், பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்குமான வருமான இடைவெளி நாளுக்கு நாள் அதிகரிப்பது போன்றவை அந்நாட்டை தொடர்ந்து ஆபத்தான நாடுகள் பட்டியலிலேயே வைத்துள்ளது.

அண்மையில் மக்கள் புரட்சிகளை சந்தித்த எகிப்து துனிசினியா ஆகிய நாடுகளில் நிலவும் உணவுப் பொருட்களின் விலையேற்றம், கலவரங்கள் போன்றவை, ஆபத்தான நாடுகளின் பட்டியலிலேயே இந்நாடுகளை இடம் பெறச் செய்துள்ளதாக அந்த ஆய்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

இவ்வார மெயிலில் இவர்...



# ரட்கோ மிலடிக்

கடந்த வாரம் முதல் சர்வதேச அளவில் பிரபலமடைந்திருப்பவர் ரட்கோ மிலடிக். 16 வருடங்களுக்கு முன்னர் செய்த குற்றத்தின் மூலம் தற்பொழுது பிரபலமடைந்துள்ளார் அவர்.

1992–95 காலப்பகுதியில் நடைபெற்ற பொஸ்னிய மோதலை உலகம் மிக எளிதில் மறந்துவிடப்போவதில்லை. உலகில் நடைபெற்ற மிகமோசமான படுகொலைகளில் பொஸ்னிய முஸ்லிம்கள் 8,000 பேர் மிகமோசமான முறையில் வெட்டியும் குத்தியும் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டனர்.

இப்படுகொலைகளை நிறைவேற்றுவதற்கு உத்தரவிட்டிருப்பவர் தான் சேர்பியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ரட்கோ மிலடிக்.

1942 மார்ச் 12 இல் பொஸ்னியாவின் கலின்விக் கிராமத்தில் பிறந்த இவர் யுகோஸ்லாவாக்கியாவில் வளர்ந்துள்ளார். சிறுபராயம் முதலே இராணுவத்தில் பற்றைக் கொண்டிருந்த அவர், யுகோஸ்லாவாக்கியாவின் மக்கள் இராணுவத்தில் இணைந்தார்.

சில ஆண்டுகளாக இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அவர் உயர் அதிகாரியாகப் பதவி உயர்த்தப்பட்டு குறித்த ஒரு படைப்பிரிவிற்குப் பொறுப்பாளராகவிருந்துள்ளார்.

இராணுவ ரீதியில் நோக்கும்போது திறமை வாய்ந்த அதிகாரியாகவே மிலடிக் செயற்பட்டுள்ளார் எனக் கூறலாம்.

1991 இல் நாட்டின் உட்கட்டமைப்பு சீர்குலைய ஆரம்பித்த நிலையில் குரோஷியப் படைகளுக்கு எதிராக யுகோஸ்லாவாக்கியாவின் 9 ஆவது படைப்பிரிவை நகர்த்தினார்.

அதே ஆண்டிலேயே இராணுவத் தளபதியாகவும் மிலடிக் பதவி உயர்த்தப்பட்டார். தன் தேசம் மீதான பற்றுறுதியின் காரணமாக போர்க்களத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதாக மிலடிக் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொஸ்னிய தலைநகரில் யுகோஸ்லாவாக்கியப் படையின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் 1992 இல் உருவாக்கப்பட்ட பொஸ்னிய சேர்பிய இராணுவத்தின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்டார் மிலடிக்.

பொஸ்னிய மோதல் உக்கிரமடைந்திருந்த சமயம் ஐ.நா. பாதுகாப்பு வலயத்தில் தங்கியிருந்த 8000 பொஸ்னிய முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லுமாறு தனது படைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அவர்களின் மூளையை எரியுங்கள், பைத்தியத்தின் விளிம்பிற்குச் செல்லும்வரை ஷெல் தாக்குதல் மேற்கொள்ளுங்கள் என தனது படைக்கு மிலடிக் உத்தரவிட்டுள்ளார்.

இம்மிகமோசமான படுகொலைகளை நிறைவேற்றுவதற்கான மிருகத்தனம் மிலடிக்குக்கு எவ்வாறு உருவானது என்பதை நோக்கினால் மிலடிக்கின் இரண்டாவது பிறந்த தினத்தின் பின்னர் அவரது தந்தை நாஷி குரோஷிய படையுடனான மோதலில் இறக்கின்றார். அத்துடன், 1991 இல் அவரது மகள் தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்கின்றார்.

இவ்வாறான சம்பவங்கள் மிலடிக்கிற்கு உடல், உளரீதியான விரக்தியை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், அந்த விரக்தியினால் அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்வதால் கிடைக்கப் போவதென்ன என்பதை அவர் உணரவில்லை.

16 வருடங்களுக்கு முன்னர் செய்த ஒரு குற்றத்திற்காக தான் தண்டனை அனுபவிப்பாரென அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

பொஸ்னிய மோதலைத் தொடர்ந்து சேர்பியாவிற்கு வந்த அவர் அங்கு அந்நாட்டு ஜனாதிபதியாகவிருந்த ஸ்லோபோடன் மிலோசெவிக்கின் ஆதரவில் சுதந்திரமாக நடமாடியுள்ளார்.

அவரது சுதந்திரமான நடமாட்டம் பல காலங்கள் நீடிக்கப்படவில்லை. காரணம் இரண்டாயிரமாம் ஆண்டுகளின் முற்பகுதியில் சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றத்தின் உத்தரவில் ஸ்லோபோடன் கைதுசெய்யப்பட்டதை அடுத்து மிலடிக் தலைமறைவு வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார்.

பல வருட கால தலைமறைவு வாழ்க்கையின் முடிவு கடந்த வாரத்தின் வியாழக்கிழமையுடன் நிறைவுபெறுமென மிலடிக் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

அன்றைய தினம் அவர் விசேட அதிரடிப்படையின் தேடுதல் நடவடிக்கையினால் கைது செய்யப்படுகின்றார்.

போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டு ஹேக் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக நெதர்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.


தற்பொழுது விசாரணையை எதிர்கொண்டுள்ள அவருக்கு எவ்வாறான தண்டனை விதிக்கப்படவுள்ளது என்பதையே அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.

இவரின் கைது முஅம்மர் கடாபி [லிபியத் தலைவர்],ஹொஸ்னி முபாரக் [எகிப்து ஜனாதிபதி] ஆகியோர் உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளையும் எச்சரிப்பதாக அமைந்துள்ளது.


குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் நிச்சயம் கிடைத்தே தீரும். சில வேளைகளில் அது தாமதமாகலாம் என்பதற்கு மிலடிக்கின் கைது சான்று. போர்க் குற்றவாளிகளும் இதில் விதிவிலக்கானவர்கள் அல்லர்.


யோ.நிமல்ராஜ்



சிரிக்க...
சிந்திக்க...!



நீங்க சொன்ன மாதிரி சிரிக்கும்போது கன்னத்தில
குழி விழகிற பெண் இப்படித்தான் இருக்காங்க தம்பி...




POLICE







# ஆஸ்மா நோய்க்கு மிகச் சிறந்த மருந்து சூரிய ஒளி

மனித வாழ்க்கையுடன் இயற்கை எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பது வியப்பை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் இயற்கையின் அற்புதமான கொடை நோய் நிவாரணியாகவும் திகழ்கின்றது.

சிறுவயதில் ஏற்படும் ஆஸ்மா (மூச்சுத்தடை) நோய்க்கு சூரிய ஒளி அரிய மருந்தாக அமைகின்றதென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உயிர்ச்சத்து டி பொதுவாக சூரியஒளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

வெலன்சியன் ஆய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் சூரிய ஒளிக்கும் ஆஸ்மா நோய்க்குமிடையிலான தொடர்பு கண்டறியப்பட்டுள்ளது.


அதிகளவில் சூரியஒளி உடலில் பட்டால் புற்றுநோயைக் கூட ஏற்படுத்தக்கூடிய ஆபத்துக் காணப்படுகின்றது. எனினும் முற்று முழுதாக சூரியஒளியை நிராகரிப்பதும் ஆபத்துகளை ஏற்படுத்தும்.

சூரிய ஒளியினால் ஏற்படும் நன்மை,தீமைகளை ஆராய்ந்து சமநிலையாகப் பேணுவதே புத்திசாதுரியமானது என ஆஸ்மா நோய் தொடர்பான முன்னணி ஆய்வாளர் அல்பர்ட்டோ அர்னிடொ பென்னா தெரிவித்துள்ளார்.

மனித உடலுக்குத் தேவையான 90 வீதமான உயிர்ச்சத்து டி சூரியஒளியின் மூலம் உடலுக்குக் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்துமா நோயாளிகளின் உடலில் உயிர்ச்சத்து டி குறைந்தளவிலேயே காணப்படும்.

வடக்கு ஸ்பெயின் போன்ற குளிரான பிரதேசங்களைச் சேர்ந்த சிறுவர்,சிறுமியர் ஆஸ்துமா நோயினால் அதிகம் அவதியுறுகின்றனர்.

ஸ்பெய்னின் முக்கியமான ஒன்பது நகரங்களில் 45 ஆயிரம் சிறுவர் மற்றும் இளைஞர்களிடம் ஆஸ்மா தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.இந்த ஆய்வு தொடர்பான தரவுகள் சர்வதோ பயோமெட்ரியல் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




ஆஸ்மா நோய் ஏற்படுவதற்குப் பிரதான காரணியாக காலநிலை மாற்றத்தைக் குறிப்பிடுகின்றனர். போதியளவு உயிர்ச்சத்து டி கிடைப்பதற்கு சூரியஒளி மிகவும் அவசியமானது.

ஆஸ்மா,கசம் போன்ற தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்த உயிர்ச்சத்து டி மிகவும் இன்றியமையாதது என ஆய்வாளர் அர்னிடொ பென்னா தெரிவித்துள்ளார். நாள்தோறும் 20 முதல் 30 நிமிடங்கள் சூரிய ஒளியைப் பெற்றுக்கொள்வது போதியளவு உயிர்ச்சத்து டி யைப் பெற்றுக் கொள்ள வழிகோலும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குளிர்காலங்களில் சில நாடுகளில் போதியளவு சூரியவெளிச்சம் கிடைக்காது. எனவே, இவ்வாறானவர்கள் செயற்கை உயிர்ச்சத்து டி பெற்றுக் கொள்ள வேண்டுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



## பேசியே மொபைல் போனை சார்ஜ் செய்யலாம்

மின்சாரமில்லாமலேயே செல்போன் பற்றரி சார்ஜானால்? நினைத்தாலே சந்தோசமாக இருக்கிறது. நடந்தால்? அதுவும் எப்படி? செல்போனில் பேசிக் கொண்டிருக்கும் போதே. இந்தக் கனவு நனவாகும் காலம் தொலைவிலில்லை.

செல்போனில் பேசும்போது உண்டாகும் ஒலியை மின்சாரமாக மாற்றும் ஒரு புதிய தொழில்நுட்பத்தை கொரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த மின்சாரம் செல்போனின் பற்றரியை சார்ஜ் செய்ய போதுமானது. அது மட்டுமல்ல, பேசாத போதுகூட வெளியிலுள்ள சப்தங்கள் மற்றும் போனிலுள்ள ஆடியோ ஒலியைக் கூட மின்சாரமாக மாற்ற இயலும் என்பதுதான் இந்தக் கண்டுபிடிப்பின் ஹைலைட். சுற்றுச்சூழலில் ஏற்படும் ஓசையை ஏதேனும் ஒரு விதத்தில் பயன்படுத்த முடியுமா என்று எழுந்த கேள்விதான் இந்த ஆராய்ச்சிக்கு அடிப்படை. சுமார் 100 டெசிபல் அளவிலான ஒலியிலிருந்து 50 மில்லி வோல்ட் மின்சாரத்தைப் பெற முடியுமென்றும் கண்டுபிடித்துள்ளனர்.



## சைகைகளால் பேசும் சிம்பன்சிகள்

சிம்பன்சி குரங்குகள் சைகைகளில் பேசிக்கொள்ளும் என்பதை நாம் முன்பே அறிவோம். ஆனால், நமக்குத் தெரிந்ததை விட இரண்டு மடங்கு அதிக எண்ணிக்கையில் சுமார் 66 வகையான மேனரி சங்களை அவை பயன்படுத்துகின்றன என்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்திலுள்ள செயின்ட் ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வு முடிவுகள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன. உகண்டாவில் சிம்பன்சிகளுக்கான சரணாலயம் ஒன்று உள்ளது. இங்குதான் நடத்தப்பட்டது அந்த ஆய்வு.

தன் முதுகின் மீது ஏறிக் கொள்ளும்படி குட்டியிடம் சொல்வதற்கும் குட்டியின் கைகளைப் பிடித்துக் கொண்டு விளையாட கற்றுத் தருவதற்கும் என வெவ்வேறு காரணங்களுக்கு வெவ்வேறு உடல் அசைவுகள், சைகைகளை அவை பயன்படுத்துகின்றன.

ஆனால், காடுகளில் வசிக்கும் சிம்பன்சிகள் மற்ற குரங்குகளை வேட்டையாடுவதும் பெண் சிம்பன்சிகளை சிறைவைப்பதும் தங்களுக்குள்ளேயே கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவதும் தற்போது தெரிய வந்துள்ளது.

நம்ம ஊர் தாதாக்கள் கோஷ்டி மோதல்களை கற்றுக் கொண்டதும் இங்கிருந்து தானோ?

## எதிர்பார்த்த அளவைவிட சந்திரனில் அதிகளவு தண்ணீர்



பூமியின் துணை செயற்கை கோளான சந்திரனில் நிறைய கனிமவளம் இருப்பதாக முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தண்ணீர் வளம் உள்ளதா என்பது பற்றி பல தடவை ஆராய்ச்சிகள் செய்த பிறகும் உறுதிப்படுத்தப்படாமல் இருந்தது. சந்திரனை ஆய்வு செய்வதற்காக இந்தியா அனுப்பிய சந்திராயன் மிகத்திறமையாக ஆய்வு செய்து சந்திரனில் தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்தது.

அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகளும் அதை உறுதி செய்தனர். இதையடுத்து சந்திரனில் என்னென்ன வளங்கள் உள்ளது என்பதைக் கண்டுபிடிக்க நாடுகளிடம் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அமெரிக்கா, சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இடையே கடும் போட்டி நிலவுகிறது. இதற்கிடையே சந்திரனில் நாம் எதிர்பார்த்ததை விட அதிக தண்ணீர் வளம் உள்ளதாக அமெரிக்காவில் உள்ள கேஸ் வெஸ்டர்ன் ரிசர்வ் யுனிவர்சிட்டி, கர்ஜினி அறிவியல் கழகம், பிரவுன் யுனிவர்சிட்டி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுவரை கணிக்கப்பட்டுள்ள அளவை விட 100 மடங்கு அதிக சுத்தமான தண்ணீர் நிலாவில் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறி உள்ளனர். இது சந்திரன் ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா நாட்டு விஞ்ஞானிகளிடமும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

Saturday மெயில் சிறுகதை

# மறக்க முடியுமா...?

சி.ரகுபதி

மகள் மோனிகாவுக்கு திருமணம் என்ற தகவல் கிடைத்தது முதலே மனதுக்குள் பரபரத்தார் குப்புராஜ். கடைசியாக அவள் குழந்தையாய் துளியில் தூங்கிக்கொண்டிருந்த போது பார்த்தது.

அதற்குள் 20 வருடம் ஓடிவிட்டது. இன்று திருமணம், அதுவும் இன்னும் ஒரு மணி நேரத்தில் திருமணம்.

குப்ராஜ் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இருந்த அந்த கல்யாண மண்டபத்தை நோக்கி நடந்தார். மார்க்கெட்டில் தற்செயலாக பார்த்த ஊர்ப்பெரியவர் தான் கல்யாண தகவலையே சொன்னார். மற்றபடி அவருக்கு திருமணத்துக்கு அழைப்பில்லை. எப்படி அழைப்பாள் அவள் மனைவி பூரணி? பழசையெல்லாம் அவளால் எப்படி மறக்க முடியும்?

கூடத்தில், சமயலைறையில், வாசலில் என பூரணியை காரணமே இல்லாமல் அடித்ததும், உதைத்ததும் அவருக்கு இந்த நேரத்தில் நினைவுக்கு வந்து தொலைத்தது.

கல்யாண மண்டபத்தை நெருங்கி விட்டார். உள்ளே போகலாமா? வேண்டாமா? மண்டபத்தில் கால் வைக்கும் அக்கணமே என்னை எத்தனை பேர் தூற்றப் போகிறார்களோ? கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப் போகிறார்களோ...? யோசனையாய் தயங்கினார் குப்புராஜ்.

''இதோ பாருங்க! ஊரே உங்களைப் பத்தி தப்பா பேசும். விட்டுருங்கோ... அந்த சரளாசவகாசம் வேண்டாம். கெஞ்சிக் கேட்கின்றேன். நமக்கும் ஒரு பெண்ணிருக்கா... பிற்காலத்தில் அவ வளர்ந்து ஆளாகி உங்களைப் பத்தி கேள்விப்பட்டா, என்ன நினைப்பா?'' பூரணி அழாத குறையாக கணவனிடம் மன்றாடிப் பாரத்தாள்.

''சரிதான் போடி... இது என் குழந்தைதானான்னே சந்தேகம் வருது!'' குப்புராஜ் குத்தலாக பேசினான்.

பூரணி தன் காதுகளை பொத்திக் கொண்டாள். ''இது மாதிரியெல்லாம் பேசினீங்க உங்க நாக்கு அழுகிடும்...'' என்றாள் அழுகை னூடே.

''பேசுவேண்டி... என் யோக்கியதைப் பற்றி நீ பேசும்போது உன்னைப் பத்தி நான் பேசக்கூடாதா? நான் உனக்கு தெரிஞ்சே துரோகம் பண்றேன்... நீ தெரியாம பண்றியோ என்னவோ?'' வேண்டுமென்றே அவளை வம்புக்கு இழுத்தபோது, அவளால் அவனது சுடு சொற்களைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''உங்க கூட இனி எனக்கு சரிப்படாது. நான் என் குழந்தையோடு எங்கம்மா வீட்டுக்குப் போறேன். நீங்க அந்த சரளாவை வீட்டுக்கே அழைச்சிட்டு வந்து குடித்தனம் பண்ணிக்கோங்க!''

''நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இனி எனக்கு அவகூடதான் வாழ்க்கை. உன்னைத் தலை முழுகிடுறேன்!''

பூரணி குழந்தையோடு அம்மா வீட்டுக்குப் பயணப்பட்டாள்.



குப்புராஜ் கல்யாண மண்டபத்திற்குள் தயங்கி தயங்கி ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தார். ஒரு அம்மாள் ஓடிப்போய் மோனிகாவுக்கு அலங்காரம் செய்வதை கவனித்துக் கொண்டிருந்த பூரணியின் காதில் கிசுகிசுப்பாய் சொன்னாள்... ''உன் புருஷன் வந்திருக்கா!'' பூரணி இதை எதிர்பார்த்தாள். ஒருவேளை தகராறு செய்ய வந்திருப்பாரோ? வெளியே வந்தாள். கல்யாண மண்டபமே பரபரப்பில் சூழ்ந்தது.

''யாரு உங்களை இங்கே அழைச்சது? எதுக்காக வந்தீங்க? பிரச்சினை கிளப்பவா?''

''பூரணி! ஏன் இப்ப என்னை வார்த்தையால் கொல்றே? இப்ப நான் பழைய குப்புராஜ் இல்லை. ஒரேமுறை மணக்கோலத்தில் குழந்தை முகத்தைப் பார்த்துட்டு போயிடுறேன்.'' இதற்குள் மாப்பிள்ளையின் அப்பா வந்தார்.

''மன்னிக்கணும்... உங்களைப் பத்தி எல்லா விபரமும் பூரணி சொன்னாங்க. அதையெல்லாம் கேட்ட பிறகும் நான் மோனிகாவை மருமகளா ஏத்துக்க சம்மதிச்சிருக்கேன்னா இவங்களோட நல்ல குணத்துக்காகத்தான். தயவு செய்து வெளியில் போயிருங்க. நீங்க இல்லாமதான் இந்த கல்யாணம்னு முன்பே அவங்க சொல்லிட்டாங்க. முன்பின் தெரியாத நானே பூர்ணியோடு அப்பழுகில்லாத நல்ல குணத்தைப் புரிஞ்சுக்கிட்ட அளவுக்குக்கூட தொட்டு தாலி கட்டின உங்களாலே புரிஞ்சுக்க முடியலைங்கிறது உண்மையிலேயே கேவலம். தயவு செய்து போயிடுங்க!''

குப்புராஜ் அவமானமாய் உணர்ந்தார்.கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. தான் செய்த பாவத்திற்கு இத்தனை வருடத்திற்குப் பிறகு பூரணி ஒரே நிமிஷத்தில் தண்டனை கொடுத்து விட்டாள்

''நான் மோனிகாவைப் பார்க்கணும்... கொஞ்சம் கூப்பிடுங்க''

மோனிகா வந்தாள், முக ஜாடையில் அப்படியே பூரணியை உரித்து வைத்திருந்தாள்

''அப்பா! இத்தனை வருஷமா என்னை ஏன் பார்க்க வரலை? இப்போ மட்டும் வந்தீங்க?''

குப்புராஜுக்கு அழுகை பொங்கி வந்தது

''மோனிகா! உள்ளே போ.. அதான் பார்த்தாச்சில போதும் உங்களோடு போலிப்பாசமெல்லாம்!'' என்றாள் பூரணி

அதற்குள் மாப்பிள்ளை பையன் ஓடி வந்தான்.

''அத்தை !அவரு திருந்தி வந்திருக்கிறார் அவரு அழுகையை பார்த்தா தெரியலை''

''தம்பி! திருந்தி வந்தா ஏத்துக்கணுமா? நான் அது மாதிரி போயிருந்தா... என்னை வரவேற்பீங்களா? இந்த சமுகத்தில் ஆண்களுக்கு ஒரு சட்டம். பெண்களுக்கு ஒருசட்டமா? கைக்குழந்தையா இருக்கும் பொழுதே மோனிகாவை விட்டு விட்டு என்னையும் உதறிவிட்டு இவர் போனபிறகு எவ்வளவு வைராக்கியத்தோடு இருந்து இவளை வளர்த்தேன்? எப்படியெல்லாம் கஷ்டப்பட்டேன்... என்னோட நல்ல நடத்தையினாலே சமுகத்தில் இன்னிக்கு தலை நிமிர்ந்து நிற்கிறேன். அன்னிக்கு இல்லாத இவரோட ஆதரவு இன்னிக்கு தேவையில்லை தயவுசெய்து அவரைப்போகச் சொல்லுங்க தம்பி.

பொங்கி வெடித்தாள் பூரணி. குப்புராஜ் மௌனமாய் வெளியேறினார்.ன தெருமுனை திருப்பத்தையும் கடந்த போது தூரத்தில் கெட்டிமேள சத்தம் கேட்டது.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
**Saturday மெயில் சிறுகதை**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## தமிழக முதல்வருக்கு ஓர் மடல்



எட்டுக்கோடி தமிழர்களின்
ஏகோபித்த தெரிவே!
தனக்கென்று தேர்தல் வரலாற்றில்
தனி முத்திரை பதித்து நிற்கும்
தமிழகத்தின் தனிப்பெரும்
தலைவியே!- உங்கள்
தேர்தல் வெற்றிக்காய்
வாழ்த்துகள் பலகோடி
சொல்லி
ஈழத்தமிழ் கோடியிலிருந்து
தொப்புள் கொடி உறவு
எழுதும் மடலிது!

ஏழைகளின் இதயதெய்வம்
எம்.ஜி.ஆர்.வழியில்
அடக்கமான உங்கள் பேச்சும்
அரசியற் சாதுரியமும்
எங்களை
அசர வைக்கிறது!
விடாமுயற்சி
கடின உழைப்பை
வெற்றி வாய்ப்புக்கான
ஆயுதமாக எடுத்து
நீங்கள் படைத்து நிற்கும்
சாதனை
வியத்தகு அற்புத சாதனை
தே.மு.தி.க.வுடன் கூட்டணி;
திரும்பிய இடங்களிலெல்லாம்
வெற்றி வாகை; - என
எதிர்பாராத திருப்பத்தை
ஏற்படுத்திய
உங்கள் வெற்றி
எங்கள் தேசத்தின்
ஆன்மாவின் புலம்பலுக்குக்
கிடைத்த
இணையிலாத வெற்றி...!
ஊழலாட்சியை ஓடோட விரட்டி
மீண்டுமோர் ஜனநாயக
ஆட்சிக்கு வித்திட்ட
உங்களின் ஆளுமையை
ஒப்பிக்க வார்த்தைகளில்லை
உவமைகளுமில்லை..!

எதிர்க்கட்சி ஆசனத்தில்
அமர்ந்திருந்த போது
நீங்கள் சுட்டிக்காட்டிய
விடயங்களை
மீண்டுமொரு முறை
திரும்பிப் பார்க்க வேண்டிய
தருணமிது!
ஈழத்தவர் இன்னல்கள் தீர;
இதுவரை அனுபவித்த
கொடுமைகள் நீங்க;
தனிப்பெரும்பான்மையுடன்
ஆட்சிப் பீடமேறிய
உங்களிடமிருந்து
தக்கதோர் தீர்வுச்
செயற்றிட்டத்தை
எதிர்பார்க்குக் காத்திருக்கிறோம்

பொய் வாக்குறுதிகளும்
பரபரப்புக்காக மட்டும்
அரங்கேற்றும்
பாசாங்கு வேஷங்களும்
உருக்குலைந்து போன எங்கள்
வாழ்வில்
எதுவித மாற்றத்தையும்
ஏற்படுத்தாது என்பதற்கு
கடந்த கால குடும்ப ஆட்சியில்
நாம் கற்றுக்கொண்ட
பாடங்கள் போதும்
இனியும் வேண்டாம்
இப்படியொரு ஏமாற்று வித்தை
வாய்ப் பேச்சோடு மட்டும்
வாக்குறுதிகள் மறைந்து
போகாது
திட்டமிட்ட படி திறம்பட
செயலாற்ற வாழ்த்துகள்

பெண்ணினத்திற்கே பெருமை
தேடித்தந்த உந்தன்
விழியசைவுக்காய்
காத்து நிற்கின்றது
உலகத்தமிழினம்!
நீதியின் பாதையில்;
நேர்மையின் வழியில்;
மக்களாட்சிமிக்க
மாண்புறு அரசை உருவாக்க
மாபெரும் வெற்றிக்கனிபறித்த
உங்களை மனமார
வாழ்த்துகின்றோம்

**குறிஞ்சிக்கவி**
**செ.ரவிசாந்**
**வீரமனை,**
**குப்பிளான்**

## நிகழ்கால நிஜங்கள்

புற்றுப் பாம்புகள் கூட
வெளிக் கிளம்புவதை
நிறுத்தி விட்டன
கொடிய மனிதர்களின்
நடமாட்டங்களை
எண்ணி!

எக் காரியத்திலும்
கவனித்தே
கால் வைக்க வேண்டிய
சூழ்நிலை
ஒருவனுக்காய்
ஒருவன் விரித்திருக்கும்
வலைகள்

தூசுப் படலங்களால்
மூடப்பட்டிருக்கும்
மனிதாபிமானங்கள்
துருப்பிடித்துப்
போயிருக்கும்
சில இரக்கமில்லாத
இதயங்கள்

காலம் தவறிய
மழை வீழ்ச்சி
சகிக்க முடியாத
வெப்பம்
இவை யாவும்
ஒருமித்து சொல்கிறது
மனித வாழ்வின்
கடைசிக் கட்டத்தை

**பா.ரிசாந்தன்,**
**ஹொப்டன்.**

## கலைந்துபோன காதல் கோலம்

விழித்து விழித்து
தூங்க வேண்டியிருக்கிறது
ஓர் அகதியைப் போல்

திடீரென கண்களைத் திறக்கும்
அதிகாலைப் பொழுதில்
இதயம் ஒரு கணம்
நின்று துடிக்கிறது

கூதலின் சாரலுக்குள்
நீந்துகிறது ஆத்மா
வாடகை வீட்டுக்காரனைப்
போல்
திகதி குறிக்கிறது மனசு

நம்பிக்கையிழந்த
நாளைக்காய்
காத்திருக்கும் கிழவனைப்போல்
தவமிருக்கிறது என் இதயம்
கிடைக்காத ஒன்றுக்காய்
மாற்றத்துக்காய் நகர்கிறது
என் பாதங்கள்

அவ்வாறு நகர்கையில்
காலங்கள் செய்யும்
கோலங்கள் தான்
எத்தனை...

மிட்டாய்க்காய் ஏங்கும்
அப்பாவிக் குழந்தையைப்
போல்
எதற்கெல்லாமோ ஏங்குகிறது
குழந்தைத் தனமான என் மனசு

காதலியின் வருகையை
எதிர்பார்த்து
ஏமாந்துபோகும்
காதலனைப்போல்
என் மனசும் இதயமும் கழற்றி
வைக்கப்பட்டு
விடிந்து போகிறது
ஒவ்வொரு இரவும்

**ஏ.எம்.அஸ்கர்**
**இல.175,நாசர் வீதி**
**அட்டாளைச்சேனை-01**



## பாவலர் பார்வையில்...

## நானாக நான் இல்லை!

நான் பார்க்கும்
இடமெல்லாம் நீ...
இருக்கிறாய் !
நான் கேட்கும்
ஒலிகளிலெல்லாம்
நீ...சிரிக்கிறாய்!
என் இரவில்...
நிலவாகவும்
என் கவிதைகளின்
கருவாகவும் நீயே
இருக்கிறாய் !

சில சமயங்களில்
நானாகவும் ...
இருக்கிறாய்!
இப்படி எல்லாமுமாக
நீ இருப்பதனால்
நான் இப்போதெல்லாம்
நானாகவே
இருப்பதில்லை
எப்போதும்!

**கே.எம். சம்ஸ்,**
**பரகடுவ.**

## ஆறாத காயங்கள்

எத்தனையோ கனவுகளோடு
எம் கல்வி தொடர்ந்தாலும்
புதைகுழி மேடுகளே-எம்
கண்களில் புலர்கிறது.

இறுதிக் கட்டப் போரின் சத்தம்
இன்னமும் எம் காதுகளை விட்டு
கனதூரம் செல்லவில்லை.
அப்பாவி குழந்தைகளின்
அழுகை ஒலியும்
காயம் பட்டு சிதைந்துபோன
உடலங்களும்
கண்ணுக்குள்ளே வந்து
வேதனையை அள்ளி வார்க்கிறது.

விதியின் கோரப் பிடியால்
யுத்தத்தில் அகப்பட்ட
மக்களின் மனங்களிலே
இழப்புகளின் அதிர்வுகள்
இன்னமும் குறையவில்லை.

**மருதங்கேணியூரான்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமெனால்
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி,**
**கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

040611-1.indd 19
Process Cyan Process Magenta Process Yellow



# ஆரோக்கியமான வாரிசுகளை உருவாக்கும் 'ஸ்டெம் செல்' வங்கி

'என்னம்மா, கல்யாணமும் பண்ணிட்டு உன் பிள்ளை வெளிநாட்டுக்குப் போய் தங்கிட்டான்.ஒரு வருஷமாச்சு, உன் மருமகள் வயிற்றுலே ஒரு புழுபூச்சி கூட இன்னும் வளரலையா? பிள்ள கிட்ட என்ன ஏதுனு கேட்டியா? அதெல்லாம் கேட்டாச்சு.அதுக்கு அவன் சொல்றான் 'மம்மி உன் காலத்தோட இந்த வயிற்றுல புழுபூச்சி வசனம் முடிஞ்சு போச்சு இப்ப விஞ்ஞானம் ரொம்ப முன்னேறி இருக்கு உனக்கு பேரனோ, பேத்தியோ தயாராகத்தான் இருக்காங்க.நாங்கதான் தள்ளிப்போடறோம்' னு சிரிச்சுகிட்டே சொல்றான். எனக்குத்தான் ஒண்ணும் புரியலை...

இப்படி வசனங்கள் முதல் இரண்டாவது தலைமுறை பெண்களிடையே இருக்கத்தான் செய்கிறது.ஆனால், இன்றைய மூன்றாவது தலைமுறை தம்பதிகள் ரொம்பவும் உஷாராகி விட்டனர். கல்யாணம் முடிந்த பத்தாவது மாதத்திலேயே கருத்தரிக்காவிட்டால் உறவினர் பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளாக வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. எப்போது, எப்படிபட்ட ஆரோக்கியமான அறிவுள்ள குழந்தை பெற வேண்டும் என்று மட்டுமல்ல, எத்தனை குழந்தைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூட திட்டம் போட்டு விடுகின்றனர். அதற்காகவே , வெளிநாடுகளில் ஏகப்பட்ட மருத்துவ சேமிப்பு வசதிகள் உள்ளன. அதில் ஒன்று தான் விந்து. கருமுட்டை சேமிப்பு வங்கி. தேவைப்படும் போது அவற்றை உயிர்ப்பித்து, பெண்ணின் கருப்பையில் வைத்து தைத்தால் முடிந்தது விடயம். இந்த முறை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்ல இப்போது ஆசிய நாடுகளிலும் வந்து விட்டது.

அந்த வகையில் இப்போது லேட்டஸ்ட், ஸ்டெம் செல் வங்கி.நம் உடலில் மொத்தம் 200 வகையான செல்கள் உள்ளன. இவைதான் எதற்கும் மூலமாக இருக்கின்றன. இரத்தம் முதல் உடல் உறுப்புகள் வரை சரியாக இருந்தால் எந்த நோயும் அண்டாது. அவை சுத்தமாக இருந்து சீராக இயங்க செல்கள். ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியம். அதைச் செய்வதும் கோளாறு பிடித்த செல்களை மாற்றுவதும் தேவைப்படும் உறுப்புகளுக்கும் மாற்று உறுப்பை உருவாக்குவதும்தான் ஸ்டெம் செல்லின் வேலை.

உதாரணமாக; இரத்தம் போதவில்லை அல்லது ஆரோக்கியமாக இல்லை என்றால், அதை சுத்தப்படுத்தி புதிதாக இரத்தத்தை உருவாக்கவும் இந்த ஸ்டெம் செல்லால் முடியும்.

மூன்றாவது முறை திருமணம் செய்த இந்திய திரையுலக நட்சத்திரங்கள் சஞ்சய் தத்- மான்யதா, ஹிருத்திக் ரோஷன்-சூசன், மாதவன்-சரிதா உட்பட நட்சத்திர தம்பதிகள் சிலரிடம் ஒரு ஒற்றுமை உள்ளது. என்ன தெரியுமா? இவர்கள் எல்லாரும் 'ஸ்டெம் செல்' சேமிப்பை அதன் வங்கியில் ஆரம்பிக்க முன்வந்துள்ளனர். எதற்காக தெரியுமா? தங்கள் வாரிசுகளாவது எந்த ஆரோக்கிய குறைவும் இல்லாமல் திடகாத்திரமாக வாழ வழி செய்யத்தான். அதெப்படி முடியும் என்று நீங்கள் கேட்கலாம். வேறொன்றுமில்லை.ஒருவேளை பரம்பரை கோளாறு ஏதாவது இருந்து அது சிக்கலை உருவாக்கி விடக் கூடாதல்லவா? அதை தடுக்கவே, ஸ்டெம் செல் சேமிப்பு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. எங்கு இருக்கிறது ஸ்டெம் செல்?

உடலில் எங்கு வேண்டுமானாலும் இந்த ஸ்டெம் செல் இருக்கலாம் என்றாலும் முதுகெலும்பிலுள்ள எலும்பு மச்சையில் தான் அதிகம் இருக்கிறது.அதை விட, குழந்தை பிறக்கும் போது தொப்புள் கொடி அறுக்கப்படுகிறதல்லவா? அப்போது வெளியேறும் முதல் இரத்தத்தில் எல்லா வகையான செல்களும் உள்ளன. இதை சேமித்தால், அந்த குழந்தையின் வாழ்நாள் முழுக்க எந்த உறுப்பு குறைபாடு ஏற்பட்டாலும்அவற்றை சரி செய்ய முடியும். அதற்கு இந்த ஸ்டெம் செல் போதும். அதனாலேயே வெளிநாடுகளில் இந்த ஸ்டெம் செல் மட்டுமல்ல, தொப்புள் கொடியை சேமிக்கும் வங்கிகள் உள்ளன. இந்த வங்கிகளில் நம் இளம் தம்பதிகள் பலரும் விந்து, கருமுட்டை முதல் ஸ்டெம் செல்கள் வரை சேமித்து வருகின்றனர். இதற்காகவே ஆண்டுதோறும் கணிசமான கட்டணத்தையும் செலுத்தி வருகின்றனர்

**நோயில்லா எதிர்காலம்**

சாதாரண இருமல் முதல் புற்றுநோய் வரை வருவதற்கு பரம்பரையும் ஒரு காரணம் என்கின்றனர் மருத்துவர்கள். எனவே நம் மரபியல் கூறுகளை சரி செய்து விட்டால், கண்டிப்பாக எந்த பெரிய வியாதியும் வராது.அதற்கு கைகொடுப்பது செல்கள் தான். எனவேதான் இன்றைய தலைமுறையினர்ர், வங்கியில் பணத்தையும் மருத்துவ வங்கியில் ஸ்டெம் செல்களையும் சேமிக்கின்றனர்.



# ஆட்டம் காண்கிறது பாகிஸ்தான் கிரிக்கெட்...

**பா**கிஸ்தான் கிரிக்கெட் குழம்பிப் போயுள்ளது. தொடர்ந்து பிரச்சினையை சந்தித்து வருகிறது. பிரச்சினையே இல்லாத நாளில்லையெனக் கூறுமளவுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது புதுப் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஒரு நாள் போட்டி கப்டனாக சாகித் அப்ரிடி பணியாற்றினார். சமீபத்தில் மேற்கிந்தியாவில் நடந்த ஒரு நாள் தொடரை அவரது தலைமையிலான பாகிஸ்தான் அணி 3-2 என்று கைப்பற்றியது. இந்தத் தொடரின் போது அவருக்கும், அணியின் பயிற்சியாளர் வக்கார் யூனிஸுக்கும் அணி தேர்வு விவகாரத்தில் மோதல் ஏற்பட்டது.

ஆடும் அணித் தேர்வில் வக்கார் யூனிஸின் தலையீடு அப்ரிடிக்கு அதிருப்தியை அளித்தது. 'ஒவ்வொருவரும் தங்களது பணியை செய்ய வேண்டும். மற்றவர்களின் பணியில் தலையிடத் தேவையில்லை" என்று அப்ரிடி வெளிப்படையாக விமர்சித்தார்.

இதைத் தொடர்ந்து அயர்லாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் கப்டன் பதவியிலிருந்து அப்ரிடி திடீரென கழற்றி விடப்பட்டார். அவரை நீக்குவதற்கு உறுதியான காரணங்கள் உள்ளன. சரியான நேரத்தில் அதனை தெரிவிப்பேன் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் தலைவர் இஜாஸ் பட் தெரிவித்திருந்தார்.

கப்டனாக இல்லாவிட்டாலும்




வீரராக அணியில் அப்ரிடிக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. அவருக்கு பதிலாக மிஸ்பா உல்-ஹக் கப்டனாக நியமிக்கப்பட்டார். கப்டன் பதவியை பறித்ததால் ஆத்திரமடைந்த அப்ரிடி தந்தைக்கு உடல் நலம் சரியில்லை என்று கூறி அயர்லாந்து தொடரிலிருந்து விலகினார்.

எனினும் ஒரு நாள் அணிக்கான கப்டன் பதவியிலிருந்து தன்னை நீக்கியதால் ஏற்பட்ட அதிருப்தியில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து அப்ரிடி அதிரடியாக ஓய்வை அறிவித்துள்ளார். தவிர பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) மீதும் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீதும் தேர்வுக் குழு உறுப்பினர் முகமது இலியாஸ் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளை தெரிவித்திருந்தார். சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்த அப்ரிடி இது பற்றி கூறியதாவது;

நான் தேசத்துக்காகத் தான் விளையாடுகிறேன். மக்கள் என் மீது அதிகப்படியான அன்பும் மரியாதையும் வைத்துள்ளனர். வீரர்களுக்கு எப்படி மரியாதை தர வேண்டுமெனத் தெரியாத கிரிக்கெட் சபை எதற்காக நேரத்தை வீணாக செலவிட வேண்டும். தற்போதுள்ள கிரிக்கெட் சபை நிர்வாகிகளால் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு தான் அவமானம். இவர்களிடம் கப்டன் பதவிக்குரிய மரியாதை கிடைக்கவில்லை. என்னையும் அவமானப்படுத்தி விட்டனர். அணியின் கப்டன் பதவியிலிருந்து என்னை நீக்குவதற்கு காரணம் தெரிவிக்கவில்லை. தவிர எந்தக் கருத்தும் கேட்கவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவராக இஜாஸ் பட் நீடிக்கும் வரை நான் எனது முடிவை மாற்றிக் கொள்ளமாட்டேன். தற்போது இருக்கும் கிரிக்கெட் சபை நிர்வாகம் மக்களின் விருப்பத்துக்கு மாறாக செயல்படுகிறது. இந்த சபை நீக்கப்பட்டு வேறு நிர்வாகம் அமைந்தால் நான் மீண்டும் வந்து விளையாடுவேன். தற்போதைய நிர்வாகம் நீடிக்கும் வரை சர்வதேச போட்டியில் விளையாட மாட்டேன். அதே சமயம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன்.



நான் கப்டனாகும் போது என்னிடம் எதுவும் கூறப்படவில்லை. எனது கப்டன் ஷிப் எவ்வளவு காலம், எனது அணி என்ன என்பது போன்ற எந்த தகவல்களும் எனக்கு அளிக்கப்படவில்லை. ஒரு சிதறுண்டு கிடந்த அணிக்கு பொறுப்பேற்றேன். அந்த சமயத்தில் பாகிஸ்தான் அணி மீது சூதாட்ட புகார் கிளம்பியது. அதன் தொடர்ச்சியாக விக்கெட் காப்பாளர் ஹைதர், பாதியில் லண்டனுக்கு ஓடினார். இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சிதறிக் கிடந்த அணியை பலமாக்க கடினமாக உழைத்தேன்.

எனது அணி இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தியது. அதன் பிறகு நியூஸிலாந்து அணியை அதன் மண்ணில் தோற்கடித்தோம். உலகக் கிண்ண அரையிறுதி வரை முன்னேறினோம். சமீபத்தில் மேற்கிந்திய தொடரில் வென்றோம். இப்போது நான் அவர்களது தொண்டையில் சிக்கிய முள் போன்று ஆகியிருக்கலாம். எனவே ஒதுங்கி விடுவது நல்லது. ஏனெனில் எனக்கென்று சுயமரியாதை உள்ளது.

என்னை ஏன் கப்டன் பொறுப்பிலிருந்து நீக்கினார்கள் என்பது தெரியவில்லை. அதற்கு என்னிடம் விளக்கமும் கேட்கவில்லை. லாகூரில் உள்ள பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த சிலர் எனக்கு எதிராக சதி செய்கிறார்கள். என்னை பற்றி கிரிக்கெட் சபைத் தலைவரிடம் தவறான தகவல்களை சொல்வதில் இவர்களும் ஒன்று. நான் தொடர்ந்து விளையாடக் கூடாது என்பதே இவர்களின் நோக்கமென்றார்.

இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை மோசமாக விமர்சித்ததற்காக அப்ரிடியுடனான ஒப்பந்தத்தை இரத்து செய்து கிரிக்கெட் சபை பழிவாங்கியுள்ளது.

அத்தோடு அவருக்கு வழங்கப்பட்ட தடையில்லா சான்றிதழையும் நீக்கியுள்ளது. இதன் காரணமாக அவர் இங்கிலாந்தில் உள்ள கவுண்டி போட்டியிலும் மற்ற எந்த 20 ஓவர் போட்டிகளிலும் விளையாட இயலாது. கடும் விமர்சனம் செய்தது தொடர்பாக அப்ரிடியிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கு ஒருவார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபையின் முடிவால் இலங்கை பிறிமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்.) 'ருவென்ரி-20" போட்டியிலும் இவரால் விளையாட முடியாத நிலையேற்பட்டுள்ளது.

# காத்திருக்கும் சோதனை



இந்திய அணியின் புதிய பயிற்சியாளர் பிளட்சர் தலைமையில் மேற்கிந்தியா சென்றுள்ள இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி வெல்லுமா என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக இங்கிலாந்தின் டங்கன் பிளட்சர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது முதல் தொடரான மேற்கிந்திய பயணம் சவாலாக இருக்குமென்று தெரிகிறது. ஏனெனில் இவரது பயிற்சியில் இங்கிலாந்து அணி ஒருநாள் போட்டிகளில் பெரும்பாலும் தோல்விகளையே சந்தித்தது.

2002 நாற்வெஸ்ற் தொடரில் இந்தியாவிடம் தோற்று கிண்ணத்தை இழந்தது.2003 உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி,2004 சாம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தோல்வி,மேற்கிந்தியாவுடன் தோல்வி,கடைசியில் 2007 இல் மேற்கிந்தியாவில் நடந்த உலகக்கிண்ணத் தொடரில் அடைந்த தோல்வி காரணமாக பயிற்சியாளர் பதவியை இவர் இழக்க நேர்ந்தது.

2011 உலகக் கிண்ண தொடரில் தென்னாபிரிக்க அணியின் ஆலோசகராக இருந்தும் அந்த அணியால் அரையிறுதிக்குக்கூட முன்னேற முடியவில்லை.இவரது பயிற்சியில் இங்கிலாந்து பங்கேற்ற 175 ஒரு நாள் போட்டிகளில் 75 இல் வெற்றி கிடைத்தது.(சராசரி 47, 47) இதிலும் பெரும்பாலான வெற்றிகள் சிம்பாப்வே,பங்களாதேஷ்,நமீபியா,நெதர்லாந்து அணிகளுக்கு எதிராக கிடைத்தவை தான்.

ஆனால்,டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரையில் 96 இல் 42 வெற்றி கிடைத்துள்ளது.இதில் 2005 இல் கிடைத்த ஆஷஸ் வெற்றி முக்கியமானது.இந்நிலையில் இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணிக்கு பிளட்சர்பயிற்சியில் வெற்றிகிடைக்குமா என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதேநேரம்,மேற்கிந்திய அணியும் சுமாராக இருப்பதால் பிளட்சருக்கு உண்மையான சோதனை,இங்கிலாந்து பயணத்தில் தான் காத்திருக்கிறது.இருப்பினும் மேற்கிந்தியத் தொடர் குறித்து எச்சரிக்கையுடன் பிளட்சர் கூறியதாவது;

எந்த அணியும் சொந்த மண்ணில் அசைக்க முடியாத வலிமையுடன் இருக்கும்.இதனால் இளம் வீரர்கள் கவனமாயிருக்கவேண்டும்.இவர்களிடம் அதிக திறமை உள்ளது. என்னுடைய வேலை அதனை சரியான முறையில் வெளிக்கொண்டு வருவதுதான்.

மேலும் அணியை தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்தை பிடிக்கச் செய்து அதனை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள முயற்சிப்போம். இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராக இருந்த போது வீரர்களை சுழற்சி முறையில் பயன்படுத்தி நல்ல முடிவை கொடுக்கமுடிந்தது.அதனையே இங்கும் பின்பற்றலாமென முடிவு செய்துள்ளாதாகவும் கூறினார்.

# ஐ.பி.எல்; ஒரு கல்லில் இரு மாங்காய்

சமீபத்தில் முடிவடைந்த் 4 ஆவது ஐ.பி.எல்.போட்டியில் இரண்டாவது முறையாக வென்றுள்ளது சென்னை சுப்பகிங்ஸ்.இந்தஐ.பி.எல்.போட்டியில் நிகழ்த்தப்பட்ட பல்வேறு சாதனைகளைப்போல சர்ச்சைகளுக்கும் குறைவில்லை.

வீரர்கள் நாட்டுக்காக விளையாடாமல் பணத்துக்காக விளையாடுகிறார்கள்.அதிலும் கம்பீர் போன்றவர்கள் காயத்தை மறைத்து விளையாடியுள்னர் என ஒரு சிலரும் விளையாடுவது நாட்டுக்காகவா அல்லது கிளப்புகளுக்காகவா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை வீரர்களுக்கு மட்டுமே உள்ளது என முன்னாள் கப்டன் கபில்தேவும் கூறியுள்ளனர்.

சர்ச்சைகள் ஒருபுறம் இருப்பினும் ஐ.பி.எல்.போட்டியின் சாதகங்களையும் ஒதுக்கிவிட முடியாது.இந்தப்போட்டியைப் பொறுத்தவரையில் எந்த ஒரு வீரரும் சர்வதேச அளவிலான போட்டியைப் புறக்கணித்துவிடவில்லை.

சிலருக்கு இந்தப் போட்டியில் காயமேற்பட்டிருக்கலாம்.அவர்களை பணத்திற்காக மட்டுமே விளையாடுகிறார்கள் என்று விமர்சிப்பது சரியாக இருக்காது.காயம் எல்லா நேரங்களிலும் ஏற்படுவதுதான்.

இளம் வீரர்கள் தங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல களமாக இருந்திருக்கிறது ஐ.பி.எல்.வளர்ந்து வரும் இளம் வீரர்கள் தங்களின் ஆட்டத்திறனை மேம்படுத்திக் கொள்ள இதைவிட ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்குமா என்றால் அது சந்தேகமே.

ஐ.பி.எல்.போட்டியின் மூலமாகவே பால் வல்தாட்டி,மனோஜ் திவாரி போன்ற வீரர்கள் வெளியுலகுக்கு தெரியவந்தனர்.ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக விளையாடியதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் மற்றும் டெஸ்ட் அணியில் ஆடும் வாய்ப்பை சிலர் பெற்றுள்ளனர்.பஞ்சாப் அணியில் விளையாடி வரும் முன்னாள் வீரர் ஜெப் மார்ஷின் மகன் ஷோன் மார்ஷ் ஐ.பி.எல்.போட்டியில் சிறப்பாக ஆடியதாலேயே அவுஸ்திரேலிய அணியினரால் அடையாளம் காணப்பட்டார்.

இது மட்டுமன்றி சென்னை அணி என்றால் அதில் தமிழக வீரர்கள் மட்டுமல்லாது வெளிமாநிலங்கள்,வெளிநாடுகளைச்சேர்ந்தவர்களும் இடம்பெற்றிருந்தனர்.இதனால் சில மூத்த வீரர்களிடமிருந்து கிரிக்கெட் நுணுக்கங்களை கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இளம் வீரர்களுக்கு எளிதாகக் கிடைத்தது.

ஐ.பி.எல்.போட்டியில் பெரும்பாலான அணிகளின் பயிற்சியாளர்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.இதனால் மிகச் சிறந்த பயிற்சியாளர்களிடம் பயிற்சி பெறும் வாய்ப்பும் கிடைத்தது.

பிரபலமான பயிற்சியாளர் ஒருவரிடம் பயிற்சி பெற வேண்டுமானால் இலட்சக்கணக்கான பணத்தை ஒரு வீரர் செலவிட வேண்டியிருக்கும்.ஆனால் ஐ.பி.எல்.போட்டியிலோ ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப் போல பணத்துடன் இலவசமாகப் பயிற்சியும் கிடைத்துள்ளது.

இந்திய வீரர்களுடன் பல்வேறு நாடுகளைச்சேர்ந்த வீரர்கள் ஐ.பி.எல் போட்டியில் ஆதாயம் பெற்றாலும் பாகிஸ்தான் வீரர்கள் புறக்கணிக்கப்படுவதை ஏற்கமுடியாது.பாகிஸ்தானின் முன்னாள் கப்டனாக வாசிம் அக்ரமை கொல்கத்தாவின் பயிற்சியாளராக நியமிக்கும்போது பாகிஸ்தான் வீரர்களை மட்டும் அணியில் சேர்க்க மறுப்பது ஏன்?

பகைமையை மறந்து நட்புறவு பாராட்டுவதுதானே விளையாட்டு. அத்தகைய விளையாட்டிலேயே பாகிஸ்தானைச் சேர்க்க மறுக்கின்ற விளையாட்டுடன் அரசியலை கலப்பது என்பது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்.விளையாட்டை விளையாட்டாக மட்டுமே பார்க்க வேண்டும்.

இனிவரும் போட்டிகளிலாவது பாகிஸ்தான் வீரர்களைச் சேர்க்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை(பி.சி.சி.ஐ)முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.இரு நாட்டு மக்களிடையே நட்பு வலுப்பட இது மிகவும் உதவும்.



# பொஸ்னியப் படுகொலை

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

## போர்க்குற்ற விசாரணைகள் மீது ஏற்படுத்தியுள்ள புதிய எதிர்பார்ப்புகள்

மனித குலத்தின் குணவியல்புகளுக்கு அப்பால் கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க முடியாத கொடூரங்களைப் புரிந்த முன்னாள் இராணுவத் தளபதியொருவர் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐந்தறிவிலிருந்து ஆறறிவை வேறுபடுத்தும் மனித குலத்துக்கேயுரிய சிறப்பியல்புகளில் ஒன்றையேனும் கொண்டிருக்காத இக் கொடூர மனம் கொண்ட தளபதியின் கைது போர்க்குற்றங்கள் மீதான சர்வதேச நடவடிக்கைகளில் புதிய எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது.

ஒசாமா பின்லேடன் மீது குவிந்திருந்த கவனம் அனைத்தும் தற்போது பொஸ்னிய–சேர்பிய தளபதியான ரட்கோ மிலாடிக் மீது குவிந்துள்ளது.

பின்லேடன் அளவுக்கு இவர் உலகளவில் பிரபலமாகாவிட்டாலும் கூட பின்லேடனை விடவும் பெரியளவிலான படுகொலைகளை அரங்கேற்றியிருக்கும் இத் தளபதி மனித குலத்தின் கசாப்புக்கடைக்காரன் என்ற பட்டத்தை சூட்டிக் கொள்வதற்கு மிகவும் பொருத்தமானவர்.

ஆனால் தேசிய ரீதியில் நாட்டுக்கு அவமதிப்பைப் பெற்றுத் தந்தவர் என்பதற்கு அப்பால் பெரும்பாலான சேர்பியர்கள் இவரை ஓர் போர்க் கதாநாயகனாகவே கொண்டாடுகிறார்கள்,

பொஸ்னியாவின் கசாப்புக் கடைக்காரன் என வர்ணிக்கப்படும் மிலாடிக் (வயது 69) சேர்பியத் தலைநகர் பெல்கிரேட்டிலிருந்து 50 மைல் தொலைவிலிருந்த நன்கறியப்படாத லஷாறிவோ என்னும் கிராமத்தில் கைதானார். இவர் கைதாகும் போது இரு கைத்துப்பாக்கிகளை மட்டுமே வைத்திருந்ததுடன் இவருடன் மற்றொரு ஓய்வு பெற்ற படைவீரர் மட்டுமே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுத் தகவல் ஒன்றின் மூலமே இவர் கைது செய்யப்பட்டதாகக் கருதப்படும் நிலையில் உயிருடன் பிடிபடுவதை விட தான் சாகும்வரை போராடவே விரும்புவதாக முன்னர் சூளுரைத்திருந்த மிலாடிக் தற்போது அதிலும் தோல்வி கண்டுள்ளார்.

இந்நிலையில் போர்க் குற்ற விசாரணைகளுக்காக ஹேக்கிலுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திற்கு மிலாடிக் நாடு கடத்தப்படவுள்ள நிலையில் அவரை நாடு கடத்தியமைக்கு எதிராக ஆயிரக்கணக்கான சேர்பியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 2 இலட்சம் உயிர்களைப் பலி கொண்ட யூகோஸ்லாவியாவின் அழிவில் மிலாடிக் இராணுவ ரீதியில் முக்கிய பாத்திரமொன்றை வகித்திருந்த போதும் உடலைச் சில்லிட வைக்கும் அளவுக்கு இவர் கொடூரங்களை அரங்கேற்றியிருந்தது ஸ்ரெபெனிகா மற்றும் சராகிவோ படுகொலைகளின் போதாகும்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவில் இடம்பெற்ற மிக மோசமான கொடூரமாக இது வரலாற்றில் பதியப்பட்டுள்ளது,

1995 ஜூலையில் ஐ.நா.வின் பாதுகாப்பு விஜயத்தின் கீழிருந்த ஆயிரக்கணக்கான பொஸ்னிய முஸ்லிம்கள் மிலாடிக் தலைமையின் கீழ் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன் சரியான எண்ணிக்கை இன்றளவும் தெரியவராத நிலையில் இது 7 ஆயிரத்திற்கும் அதிகமாகக் கூறப்படுகிறது.

சுமார் 25 ஆயிரம் பெண்களும் சிறுவர்களும் முதியவர்களும் அவர்களின் இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு வேறிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1980களின் பிற்பகுதியில் யூகோஸ்லாவியாவின் இனக்குழுமங்களுக்கிடையில் ஆரம்பித்த மோதல்களைத் தொடர்ந்து ஒவ்வொரு இனமும் தாம் பெரும்பான்மையாக வாழ்ந்த பிராந்தியங்களை எல்லைகளாக வரையறுத்துக் கொண்டு யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்தன.



இதனடிப்படையில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பொஸ்னியா–ஹேர்ஷிகோவினா யூகோஸ்லாவியாவிலிருந்து பிரிந்து 1991இல் சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொண்டதுடன் இதன் தலைநகராக சராகிவோ பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆனால் பொஸ்னியா ஹேர்ஷகோவினாவில் முஸ்லிம்களுக்கும் சேர்பியர்களுக்குமிடையிலான பிளவுகள் அதிகரித்து வந்ததுடன் சேர்பியர்கள் வலுப்பெற்று வந்தனர்.

இதனைத் தொடர்ந்து இனச் சுத்திகரிப்புக்கான அபாயம் நிலவுவதை உணர்ந்த சர்வதேச சமூகம் இப் பிராந்தியத்தில் தலையிடும் முயற்சிகளை மேற்கொண்டதுடன் ஐ.நா. பாதுகாப்புச் சபை ஸ்ரேபேனிகனையும் அதனைச் சூழவுள்ள பகுதியையும் பொஸ்னிய முஸ்லிம்களுக்கான பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது.

சேர்பியர்களின் பிடி இறுகி வந்த நிலையில் சேர்பிய இராணுவத்தில் முக்கிய பதவி நிலையொன்றை மிலாடிக் எட்டியிருந்தார்.

இந்நிலையிலேயே 1995 இல் பொஸ்னிய–சேர்பிய ஜனாதிபதி ரபோவின் கராட்சிக்கினால் உத்தரவிடப்பட்ட ஸ்ரேபேர்னிகா மீதான நடவடிக்கைக்கு மிலாடிக் தலைமை தாங்கினார்.

1995 ஜூலையில் பொஸ்னிய முஸ்லிம்கள் மீது இனஅழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்டது. ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் தஞ்சமடைந்திருந்த பொடோகரி என்னுமிடத்தை நோக்கி மிலாடிக்கின் படைகள் முன்னேற ஆரம்பித்தன.

கண்ணில் அகப்பட்ட பொஸ்னியர்களை எல்லாம் கொன்றும் பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதைக்குட்படுத்தியவாறு மிலாடிக்கின் படைகள் முன்னேறின.

12 வயதை அடையாத சிறுமிகள் கூட குழுவாக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். சிறுவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டதுடன் அழும் குழந்தைகளின் குரல்வளைகள் வெட்டப்பட்டன. சில முஸ்லிம்கள் இக் கொடூரங்களிலிருந்து தப்பிப்பதற்காக தாமாகவே தற்கொலை செய்து கொண்டனர்.

இந்நிலையில் ஸ்ரோபெர்னிகாவைச் சென்றடைந்த மிலாடிக் ஐ.நா. வலயத்திலிருந்த நெதர்லாந்து இராணுவத் தளபதியைச் சந்தித்து அங்குள்ள முஸ்லிம்கள் அனைவரையும் அவர்களிடமுள்ள அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைக்குமாறு கூறினார்.

இந்த நெதர்லாந்து இராணுவ அதிகாரியும் மிலாடிக்கிற்கு அனுசரணையாக நடந்ததுடன் தம்மை நம்பியிருந்த அகதிகளைக் கைவிட்டார்.

நெதர்லாந்து இராணுவ அதிகாரியின் நடவடிக்கை பின்னர் வெளிச்சத்திற்கு வந்ததைத் தொடர்ந்து அப்போதைய நெதர்லாந்து அரசாங்கம் இராஜினாமாச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனால் தனிக்காட்டு ராஜாவாக செயற்பட ஆரம்பித்த மிலாடிக் தனது கொடூரத்தை அரங்கேற்ற ஆரம்பித்தார்.

ஐ.நா. வலயத்திலிருந்த ஆண்கள் பெண்களிலிருந்து வேறாக்கப்பட்டனர். வேறாக்கப்பட்ட ஆண்கள் கொல்லப்பட்டு ஆறுகளில் வீசப்பட்டதாகவும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்தறிந்த பெண்கள் வலியால் துடிதுடித்ததாகவும் சம்பவத்தில் உயிர்பிழைத்த சிலரின் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

மேலும் ஆயிரக்கணக்கான பெண்களும் மிகச் சிறிய வயதுடைய ஆண்களும் முதியவர்களும் பஸ்களில் ஏற்றப்பட்டு பொஸ்னிய முஸ்லிம்களின் எல்லைக்கு அப்பால் கொண்டு சென்று விடப்பட்டனர்.

ஆனால் பருவ வயதிலிருந்த அனைத்து ஆண் பிள்ளைகளின் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

சுமார் 5 நாட்களுக்கும் மேலாக இடம்பெற்ற இப் படுகொலைகள் பண்ணைகள், சனசமூக நிலையங்கள், களஞ்சியசாலைகள், ஆற்றங்கரைகள், காடுகள் என அனைத்து இடங்களிலும் நடந்தேறின.

தமது படைப்பிரிவில் உள்ளடங்கியிருக்கும் ஒவ்வொரு படைவீரராலும் 200–300 பேர் வரை கொல்லப்பட்டதாக சம்பவ இடத்திலிருந்த சேர்பிய படைவீரரொருவர் பின்னாளில் இப்படுகொலையை நினைவுகூர்ந்த போது கூறியிருந்தார்.

மிலாடிக்கின் கொடூரங்கள் வெளிவர ஆரம்பித்ததைத் தொடர்ந்து 1994இல் முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் மிலாடிக்கிற்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டு விசாரணையை ஆரம்பித்தது.

ஆனால் அதிகாரத்திலிருந்து சில சக்திகளின் ஆதரவுடன் கடந்த 17 வருடங்களாக தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்த மிலாடிக் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கெதிராக இனஅழிப்பு, சித்திரவதை, போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றம் மற்றும் மனிதத்தன்மையற்ற கொடூரங்கள் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இதற்கான விசாரணைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சேர்பியர்களின் பெரும்பாலானோர் தொடர்ந்தும் மிலாடிக்கை ஒரு கதாநாயகனாகக் கருதும் நிலையில் அவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பது சேர்பியாவுக்கு தவிர்க்க முடியாததாகி உள்ளது.

ஏனெனில் ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமையைப் பெற சேர்பியா போராடி வரும் நிலையில் இதற்கான முக்கிய நிபந்தனைகளில் ஒன்று மிலாடிக்கை கைது செய்து குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதாகும்.

இதனடிப்படையிலேயே மிலாடிக்கை கைது செய்வதில் ஆர்வம் காட்டிய சேர்பியா உள்நாட்டில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களையும் பொருட்படுத்தாது அவரை ஹேக்குக்கு அனுப்பியுள்ளது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைகளில் இதுவரை தாம் புரிந்த கொடூரங்களுக்கு ஏற்ற தண்டனையை எந்தவொரு குற்றவாளியும் பெற்றிருக்காத நிலையில் மிலாடிக் மீதான விசாரணைகளின் முடிவும் அவ்வாறு அமைந்துவிடக்கூடாது என்பதே தற்போதைய எதிர்பார்ப்பாகும்.

ஏனெனில் இதுவொரு தவறான முன்னுதாரணத்திற்கு வழிவகுக்கும் என்பதுடன் மனிதத்தன்மையற்றவர்கள் சட்டத்திற்குக்கூட அஞ்சாது தமது கொடூரங்களை இழைப்பதற்கு வாய்ப்பளிக்கும் அபாயகரமான நிலைமையையும் தோற்றுவிக்கும்.













தமன்னா

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.